# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட் சகோதரிகள்**

எதெல்பெர்காமேரி OSM, வெர்ஜின்OSM, ரோஸ்லின் OSM – திருச்சி; ஸ்டெல்லா ரோஸ் CIC, அமிர்தராணி OSM, கலிஸ்டா மேரி OSM – திண்டுக்கல்; மேரி செசாரியா SSAM, லூர்து மேரி CIC – சென்னை; செலின்- SJC, சின்னராணி SJC - அணிலாடி; டொனட்டெல்லா அனஸ்தாசியாள் FIHM, அருள்மேரி FIHM, அனன்சியா மேரி FIHM, ஜார்லத் புஷ்பா FIHM, பிலோமினாள் FIHM, டொன்போஸ்கோ மேரி FIHM, லூக்காஸ் மேரி FIHM, டோம்னா மேரி FIHM – கும்பகோணம்; லில்லி இஸபெல்லா மேரி OSM – மதுரை; சகாயம் SJC, சிரில் SJC - கடலூர்; செல்வ ராணி OSM; அருள் சீலி SSAM – நாகர்கோவில்; வித்யா மேரி OSM, ரூபெல்லா மேரி OSM – நெல்லை; பிரேமா FSAG; புஷ்பம் FSAG – சிந்தாமணி; லோரா மேரி OSM – புன்னைக்காயல்; சலேத்மேரி FSAG – தாராபுரம்; புஷ்பா மேரி CIC; ஜெய சேகரி OSM – கொடைக்கானல்;, செபாஷ்டி -FBS- விழுப்புரம், குழந்தை தெரஸ் FASG - சேலம், சோபியா, சவரியம்மாள்- FASG

**பொதுநிலையினர்**

ரூபியா - மங்கலக்குன்று, பிரான்சிஸ் பேசில், G.S.பாத்திமா, சந்தனம், ஜான் ஜோசப், மேரி மார்கரேட், ஆனி பீட்டர் ராஜ், லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா, லூதியா மேரி, ஞான சேகரன்– திருச்சி; இருதய விஜிலா, ஜோஸ்பின் மேரி, ராணி, ஆன்டனி சிங்கராஜ் ஜோசப் - சென்னை; இருதய ராஜ் - நெல்லை, மேரி - இளையரசனேந்தல்; புஷ்பக்கண்ணு, மிக்கேல்சாமி – கோவை; சிப்ரியான் - தெளி ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மரிய பிரகாசம்- தர்மபுரி.

K. தீபா

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

அருட்சகோதரி. அருள் சீலி SSAM - முட்டம்

திருமதி. இருதய விஜிலா

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.







# தாய்மை

## பதிப்பாசிரியர் பக்கம்


**ற.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச**

கடவுள் நமக்கு கொடுத்த புத்தாண்டை அன்னை மரியாளின் தாய்மையுடன் ஆரம்பிக்கின்றோம். இந்த மாதத்தில்தான் அன்னை மரியாள் இறைவனின் தாய் என்ற மாபெரும் பெருவிழாவினைக் கொண்டாடுகின்றோம். கடவுளின் தாயான அன்னை மரியாள் உலக மக்களின் தாயாக உயர்ந்து நிற்கின்றார். இந்த அன்னை மரியாள் ஆண்டவர் இயேசுவுக்கு சிறந்த தாயாக இருந்திருக்கின்றாரா? நிச்சயமாக இருந்திருக்கின்றார்.

**நிகழ்வு 1:** ஆண் தலைப்பேறுகள் அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும் என்ற திருச்சட்டத்திற்கேற்ப குழந்தை இயேசுவைக் கோவிலில் ஒப்புக் கொடுக்க எருசலேம் சென்றார்கள். சிமியோன் என்ற தீர்க்கதரிசி இருந்தார். அவர் குழந்தை இயேசுவைக் கையில் ஏந்தி இந்தக் குழந்தை இஸ்ரயேல் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும், எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும் என்று கூறினார். இதைக்கேட்ட அன்னை மரியாள் வியப்புற்றார், அதிர்ச்சியடைந்தார். வானத்தூதரிடம் அவசரப்பட்டு ஆம் என்று சொல்லிவிட்டோமோ, இப்போது என்ன செய்வது, இந்தக் குழந்தையை வேறு யாருக்காவது தத்துக் கொடுக்கலாமா என்றெல்லாம்



## உள்ளே



| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| கூட்டியக்கத் திருஅவையின் மரியா | - 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மரியா - கடவுளின் கடிதம் | - 25 |
| குடும்ப வாழ்வில் மரியா | - 28 |
| புலர்ந்து வரும் புத்தாண்டு | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

யோசிக்கவில்லை. இது என் குழந்தை, எத்தனை சவால்கள் வந்தாலும் அதனை எதிர்கொள்வேன் என்று சிறந்த தாயாக நடந்து கொண்டார்.

**நிகழ்வு 2:** தனக்கு போட்டியாக ஒரு குழந்தை பிறந்திருக்கின்றது, இந்தக் குழந்தை வளர்ந்து ஒருவேளை அரசன் ஆகிவிடலாம் என்று பயந்து ஏரோது அரசன் இரண்டு வயதும் அதற்குட்பட்ட எல்லா ஆண் குழந்தைகளையும் கொல்வதற்கு ஆணையிடுகின்றான். இதைக்கேட்ட அன்னை மரியாள் நாம் அரசனிடம் சரணைடந்து விடுவோம் குழந்தையின் உயிர் மட்டும்தான் போகும் நாம் பிழைத்துக் கொள்ளலாம் என்று சுயநலமாக எண்ணவில்லை, என்ன ஆனாலும் சரி என் மகனை காப்பாற்றியே தீருவேன் என்று எகிப்து நாட்டிற்கு ஓடுகின்றார். தன் குழந்தையை ஏரோதிடம் இருந்து காப்பாற்றி சிறந்த தாயாக நடந்து கொள்கின்றார்.

**நிகழ்வு 3:** எருசலேம் ஆலயத்திற்கு குழந்தை இயேசு, அன்னை மரியாள், புனித யோசேப்பு என்று ஒரே குடும்பமாக செல்கின்றார்கள். மூன்று நாட்களாக இயேசுவைக் காணவில்லை. தேடுகின்றார்கள். சரி காணவில்லை அதனால் விட்டுவிடுவோம், அவனால் நாம் துன்பங்களைத்தான் சந்திக்க இருக்கின்றோம் என்று விட்டுவிடவில்லை, தொடர்ந்து தேடுகின்றார்கள். இறுதியாக தன் மகனைக் கண்டுபிடிக்கின்றார்கள். இதில் அன்னை சிறந்த தாயாக நடந்து கொள்கின்றார்.

**நிகழ்வு 4:** இயேசு, அவருடைய சீடர்கள், அன்னை மரியாள் என்று குடும்பத்தோடு ஒரு திருமண நிகழ்ச்சிக்கு செல்கின்றார்கள். அங்கு திராட்சை இரசம் தீர்ந்து விடுகின்றது. திருமண வீட்டாருக்கு அவப்பெயர் வந்துவிடும் என்று அன்னை மரியாள் இயேசுவிடம் வந்து சொல்கின்றார். எனக்கான நேரம் இன்னும் வரவில்லை என்று இயேசு சொல்கின்றார். இருந்தும் தன் மகனை முழுமையாக அன்னை மரியாள் நம்பினார். நம்பிக்கை வீண்போகவில்லை. முதல் அதிசயம் அங்கு நடந்தது. அன்னை மரியாள் சிறந்த தாயாக நடந்து கொண்டார்.

**நிகழ்வு 5**: இயேசு மக்கள் பணி செய்ய ஆரம்பித்ததிலிருந்து அவர் மீது பல குற்றச்சாட்டுகள் இருந்தது. அவர் ஒரு குடிகாரன், பெருந்தீனிக்காரன், மனநலம் பாதிக்கப்பட்டவன், பேய்களின் தலைவனைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறான். இவை அன்னையின் காதுகளை எட்டுகிறது. அவர் தன் மகனைப் பார்க்க செல்கின்றார். இயேசு சொல்கின்றார், யார் என தாய்? இறைவார்த்தையின்படி வாழ்பவர்களே என் தாய். இதைக் கேட்டதும் அன்னை மரியாள் தன் மகனிடம் சென்று சண்டை போடவில்லை. தன் மகனை புரிந்துக் கொண்டார். அன்னை மரியாள் சிறந்த தாயாக நடந்து கொண்டார்.

அன்னை மரியாள் ஆண்டவர் இயேசுவுக்கு சிறந்த தாயாக நடந்து கொண்டதுபோல ஆண்டவர் இயேசும் அன்னை மரியாளுக்கு சிறந்த மகனாக நடந்து கொண்டார். அவரை விண்ணக மண்ணக அரசியாக முடிசூட்டுகின்றார்.

**தாய்மை நம் வாழ்வின் இனிமை**
**இறைவன் கொடுத்த புதுமை**





நான் கருத்தரித்தேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**உஷா - செயின்ட் தாமஸ் மவுண்ட்**

நான் 10 வருடங்களாக கர்ப்பப்பை பிரச்சினையினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆபரேசன் இல்லாமல் கர்ப்பப்பை பிரச்சினைக்கு தீர்வு கிடைக்க வேண்டி தொடர்ந்து ஜீவமாதாவிடம் வேண்டினேன். பலன் கிடைத்தது. இப்பொழுது பரிபூரண நலம் கிடைத்து விட்டது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**கன்னியம்மாள் - பொன்னியம்மன் கோவில்**

என் அம்மா மூச்சுத்திணறல் பிரச்சினையினால் தொடர்ந்து அவதிப்பட்டார். அவரை மருத்துவமனையில் சேர்த்தார்கள். அவர்களின் நிலமை மிகவும் மோசமாக இருந்தது. நான் உடனடியாக ஜீவமாதாவிடம் ஜெபிக்க ஆரம்பித்தேன். ஏற்கனவே, ஜீவமாதா பரிந்துரையினால் எனக்கு ஆறு வருடங்களுக்கு பிறகு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதனால் தொடர்ந்து ஜீவமாதாவிடம் வேண்டினேன். என் அம்மா முழு நலம் பெற்று வீடு திரும்பினார்கள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஏசு, ஷாலினி – பெங்களூர்**

எங்களுக்கு திருமணம் ஆகி மூன்று வருடங்கள் ஆன பிறகும் எங்களுக்கு குழந்தையில்லை. என் தம்பி இங்கேதான் வேலை செய்து கொண்டிருக்கின்றான். அவன் ஜீவமாதா ஆலயம் பற்றி சொன்னான். ஜீவமாதாவிடம் தொடர்ந்து வேண்டினேன். அதற்கு முழு பலன் கிடைத்தது. 2019 ஆம் ஆண்டு எனக்கு ஆண் குழந்தை பிறந்தது. அடுத்த வருடத்தில் இன்னொரு ஆண் குழந்தை பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சுமிதா, டேவிட் - சோழிங்கநல்லூர்**

என் கணவருக்கு நெஞ்சுவலி வந்ததால் கிளினிக்கிற்கு அழைத்துச் சென்றோம். மருத்துவர் இதயக் குழாயில் அடைப்பு இருக்கலாம் என்று சொன்னார்கள். அதனால் ஈசிஜி, எக்கோ ஆகியவை எடுத்த பிறகு அடைப்பு இருக்கின்றது என்று சொன்னார்கள். என்னால் தாங்க முடியவில்லை. தொடர்ந்து ஜீவமாதாவிடம் ஜெபிக்க ஆரம்பித்தேன். பலன் கிடத்தது. ஆஞ்சியோ செய்வதற்காக அழைத்துச் சென்ற போது மருத்துவர் சொன்னார் இவருக்கு எந்த அடைப்பும் இல்லை. நலமாக இருக்கின்றார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஆனந்த லக்ஷ்மி – வேளச்சேரி**

என் மகளுக்கு திருமணாகி ஆறு மாதம் ஆனபிறகு கடுமையான வயிற்று வலியினால் அவதிப்பட்டாள். மருத்துவரிடம் சென்று ஸ்கேன் செய்து பார்த்தபோது கருவானது கருப்பைக்கு பதிலாக ட்யுபில் உருவாகி இருந்தது தெரியவந்தது. உடனடியாக ஜீவமாதாவிடம் வேண்ட ஆரம்பித்தேன். என் மகள் முழுநலம் பெற்றாள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**வியாசர்பாடி**

என் மகனுக்கும், மகளுக்கும் திருமணமாகி இரண்டு வருடங்களுக்கு மேலாக குழந்தையில்லை. தொடர்ந்து வேண்டினோம். இருவருக்கும் குழந்தை பாக்கியம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சேட்டு, நிவ்யா**

எங்களுக்கு திருமணமாகி குழந்தையில்லை. மருத்துவரை போய் பார்த்தபோது அவர் சொன்னது ஆபரேசன் பண்ண வேண்டும் அப்பொழுதுதான் குழந்தை பிறக்கும். எங்கள் உறவினர் ஒருவர் ஜீவமாதா பற்றி சொன்னார்கள். தொடர்ந்து ஜீவமாதாவிடம் வேண்டினேன். எங்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. மேரி ஜீவா
சோழிங்கநல்லூர், சென்னை

டிசம்பர் மாதம் 4 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். ஜீவமாதா திருவிழாவாக இருந்ததால் பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, தேர் பவனி, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**சகாய மேரி – சோழிங்கநல்லூர்**

எனக்கு சில மாதங்களுக்கு முன்னால் ஆஞ்சியோ அறுவை சிகிச்சை நடந்தது. அது நல்ல முறையில் நடக்க வேண்டும் என்று ஜீவமாதாவிடம் வேண்டியிருந்தேன். என் வேண்டுதலுக்கேற்ப அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மனோ,மோனிக்கா – சென்னை**

கடந்த வருடம் இங்கு வரும்போது எங்களுக்கு குழந்தையில்லை ஜீவமாதாவிடம் வேண்டியபோது எங்களுக்கு இந்த குழந்தை பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**இருதயராணி – எட்டுநாயக்கம்பட்டி**

என் அண்ணனுக்கு 2009 ஆம் ஆண்டு திருமணம் ஆனது. 10 வருடங்களாக குழந்தையில்லை. நான் அவர்களிடம் ஜீவமாதா ஆலயத்திற்கு வந்து வேண்டும்படி சொன்னேன். அவர்கள் தொடர்ந்து இரண்டு மூன்று முறை வந்து ஜெபித்து இப்பொழுது குழந்தை வரம் பெற்றிருக்கின்றார்கள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**திருநின்றவூர் - பானு**

என் மூன்றாவது மகளுக்கு திருமணமாகி எட்டு வருடங்களாக குழந்தையில்லை. ஒரு கிறிஸ்தவ சகோதரி ஜீவமாதாவைப் பற்றி கூறினார். நானும் மூன்று வருடங்களாக தொடர்ந்து இங்கு வந்து ஜெபித்தேன். என் மகள் இப்போது கருத்தரித்திருக்கின்றார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**வெட்டுவாங்கன்னி**

எனக்கு முதலில் ஒரு குழந்தை பிறந்து 21 நாள்களில் இறந்து விட்டது. அதன் பிறகு ஏழு வருடங்களாக எனக்கு குழந்தையில்லை. இங்கு தொடர்ந்து இரண்டு வருடங்களாக வந்து ஜெபித்தேன். இப்போது எனக்கு ஒரு பெண் குழந்தையிருக்கின்றது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

எனக்கு நான்கு வருடங்களாக குழந்தையில்லை. 2019 ஆம் வருடம்முதல் இந்த ஆலயத்திற்கு வந்து ஜெபித்து வருகிறேன். நான் மாதாவிடம் சொன்னேன் உங்கள் கையில் குழந்தையிருப்பது போல எனக்கும் ஒரு குழந்தை வேண்டும் என்று. இரண்டு வருடங்கள் கொரோனா லாக் டவுன் இருந்ததால் ஆலயத்திற்கு வரமுடியவில்லை. 2021 ஆம் ஆண்டு





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



**மரியாள் இறைவனின் தாய்**

ஒருநாள் பள்ளியிலிருந்து வந்தார் தாமஸ் ஆல்வா எடிசன். ஆசிரியர் ஒரு கடிதத்தை அம்மாவிடம் கொடுக்குமாறு கொடுத்து அனுப்பியிருந்தார். அந்த கடிதத்தை தன்னுடைய அம்மாவிடம் கொடுத்தார். அவரின் தாயார் அந்த கடிதத்தை மகன் கேட்கும்படி சத்தமாகப் படித்தார், “உங்கள் மகனின் அறிவுத்திறமைக்கு முன் எங்கள் பள்ளிக்கூடம் மிகவும் சிறியது. அவனுக்கு கற்பிக்க திறமையான ஆசிரியர்கள் எங்களிடமில்லை. ஆகவே, நீங்களே உங்கள் மகனுக்கு கற்பித்துக் கொள்ளுங்கள்”. பல ஆண்டுகளுக்குப் பிறகு எடிசனின் தாயாரும் காலமாகிவிட்டார். எடிசனும் அந்த நூற்றாண்டின் சிறந்த ஆராய்ட்சியாளராகவும் கண்டுபிடிப்பாளராகவும் ஆனார். ஒருநாள் தனது வீட்டின் பழைய சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது அவர் கொண்டுவந்து கொடுத்த கடிதம் கண்ணில் பட்டது. அதை எடுத்து படித்துப் பார்த்தார். அதில், “மூளை வளர்ச்சி குன்றிய உங்கள் மகனை இனிமேல் எங்கள் பள்ளிக்கு நீங்கள் அனுப்ப வேண்டாம்” என்று எழுதப்பட்டிருந்தது. இதைப்படித்த எடிசன் கதறி அழுதார். பின் அவரது டைரியில் கீழக்கண்டவாறு எழுதினார். “மூளை வளர்ச்சியற்ற தாமஸ் ஆல்வா எடிசன் தனது தாயாலேயே மாபெரும் கண்டுபிடிப்பாளனாக ஆகினேன்”. ஜனவரி 1-ம் நாள் நாம் மரியாள் “இறைவனின் தாய்” என்ற பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். ஒவ்வொரு புத்தாண்டினையும் அன்னையின் பெருவிழாவோடு துவங்குகிறோம். இறைவனின் படைப்பில் தாய் என்பவள் ஒரு உன்னதமான உயர்வான படைப்பு. “இறைவன் எல்லா இடத்திலும் பிரசன்னமாக இருக்க முடியாது என்பதாலேயே தாயைப் படைத்தான்” என்கிறது யூதப் பழமொழி. அன்னை மரியாள் ஒரு மானுடப் பிறவி இவர் எப்படி இறைவனின் தாயாக முடியும்? என்று சிலர் கேள்வி கேட்பது உண்டு. எலிசபெத்து தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் “என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? (லூக் 1:43) என்று கேட்டார். எலிசபெத்தம்மாள் மரியாவை “ஆண்டவரின் தாய்” என்று அழைப்பதனால் மரியாள் “இறைவனின் தாய்” என்பது வெளிப்படுகிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கமும் இதை உறுதிசெய்கிறது “தூய கன்னி இறைவனின் தாய் என்னும் கொடையாலும்அலுவலாலும் மீட்பரான மகனோடு ஒன்றித்திருக்கிறார்.” (திருச்சபை எண் 63). ஆகவே நம் அனைவரின் தாயும், இறைவனின் தாயுமான அன்னை மரியாவை பெருமைப்படுத்துவது நமது கடமை. “மரியாவை இறைவனின் தாய் என்று போற்றிப் புகழும் வேளையில் அன்னையின் பெயரை மகிமைப்படுத்தும் பிள்ளைகளாக வாழ முயலுவோம்.

# கூட்டியக்கத் திருஅவையின் மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்க உரை**

நற்செய்தியாளர் லூக்கா இயேசுவின் தாய் மரியாவுக்கும் ஒரு சில பெண்களுக்கும் தமது நற்செய்தியில் சிறப்பான இடம் அளித்துள்ளார். அவர்களை மற்ற ஆண் சீடர்களைப் போன்று இறைமகன் இயேசுவை பின்பற்றுபவர்களாகவே படம் பிடித்துக் காட்டுகின்றார். தனது நற்செய்தியின் தொடக்கத்திலேயே எவ்வாறு இந்த உலகமும், சமுதாயமும் அமைய வேண்டும் என்று விண்ணகத் தந்தை விரும்புகின்றாரோ அதையே மரியாவின் விடுதலைக் கீதமாகக் காட்டுகின்றார். இதை மரியாவின் அகக்காட்சி என்றும் கூறலாம். அதை நோக்கி பயணித்தார். பெந்தகோஸ்து பெருவிழாவில் உதயமான திருஅவை இந்த அகக்காட்சியைக் கண்முன்னே கொண்டு பயணிக்க ஆதி கிறிஸ்துவர்களோடு உறுதுணையாக இருந்தார். இன்று கூட்டியக்கத் திருஅவையைக் கூட்டிய திருத்தந்தை இறைவன் விரும்புகின்ற ஒரு திருஅவையாக நாம் இருக்க வேண்டும் என்று கூறுகின்றார். இறைவன் விரும்புகின்ற திருஅவை, தொடக்க கால திருஅவை போன்று இருக்க வேண்டுமென்பதே இறைத்தந்தையின் விருப்பம் என உணர்கின்றோம். அதை உருவாக்கிய பெருமை நம் அன்னை மரியாவைச் சாரும். எனவே அவரைக் கூட்டியக்கத் திருஅவையின் மரியா என்று அழைக்கலாம். இதைப் பற்றி ஒரு சில சிந்தனைகளை இக்கட்டுரையில் காண்போம்.

**கூட்டியக்கத் திருஅவையின் முப்பரிமாணங்கள்**

ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு என்ற முப்பரிமாணங்களை திருஅவையின் ஒவ்வொரு உறுப்பினரும் வாழ திருத்தந்தை அழைப்பு விடுக்கின்றார்.

**இறை ஒன்றிப்பு**

நம்மைப் படைத்து பாதுகாத்து வரும் இறைவனோடு நீக்கமற ஒன்றித்திருப்பது, அவரில் இயங்குவது, அவருக்கு பிரமாணிக்கமாக இருப்பது, அவர் சாயலில் படைக்கப்பட்ட அனைத்து மக்களையும் சகோதர சகோதரிகளாக பாவித்து அன்பு செய்வது, இயற்கையில் உறையும் இறைவனை அன்பு செய்வது, அதை பராமரிப்பது, பாதுகாப்பது, அதன் பலன்களை, பயன்களை தேவையான அளவு பயன்பாட்டிற்கு எடுப்பது இறை ஒன்றிப்பாகும்.

**பங்கேற்பு**

இவ்வுலகைப் படைத்தல், காத்தல், அர்ச்சித்தல் அல்லது புதுப்பித்தல் என்ற மூன்று வகையான பணிகளையும் ஒரே இறைவனாய், மூவொரு இறைவனாய், மூன்று ஆட்களாய், ஒரே குடும்பமாய் நிறைவேற்றி வருவதைப் போன்று திருமுழுக்குப் பெற்ற அனைவரும் திரு அவையின் வளர்ச்சியில் பங்கேற்கத் திருத்தந்தை அழைப்பு விடுக்கின்றார். அனைவரும் இணைந்து திருச்சபையின் வளர்ச்சிக்காக, திட்டமிடுதல், செயல்படுதல், மதிப்பீடு செய்தல் ஆகிய அனைத்து செயல்களிலும் ஈடுபட கூட்டியக்கத் திருஅவை நம்மை அழைக்கின்றது. “சிறு குரலும் கேட்கப்பட வேண்டும்” என்று அறிவுறுத்துகின்றது. சமுதாயத்தின் விளிம்பில் உள்ளவர்களின்





**குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்**

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.

1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே தந்தைக்கும் மகனுக்கும்




சந்தா செலுத்துபவர்கள், மணியார்டர் மூலமாகவோ, வங்கி கணக்கு மூலமாகவோ, Google Pay மூலமகாவோ செலுத்தலாம். தகவல்கள் இரண்டாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. Google Pay மூலம் பணம் செலுத்துபவர்கள் உங்கள் முகவரியை 8122795035 என்ற எண்ணுக்கு வாட்ஸ் அப் குறுஞ்செய்தியாக அல்லது சாதாரண குறுஞ்செய்தியாக அனுப்ப கேட்டுக் கொள்கின்றோம்

# புலர்ந்து வரும் புத்தாண்டு

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

புலரும் புதிய பொலிவுறு ஆண்டில்
புதியன யாவும் மலரட்டும்!
அகிலம் முழுமையும் அமைதியில் திளைத்திட
ஆண்டவரின் நிறையருள் பெருகட்டும்

இறைவனை மறுப்போர் மறப்போர் எல்லாம்
மெய்யொளி கண்டே ஒளிரட்டும்!
அவனியில் உள்ளோர் அனைவரினுள்ளே
ஆன்மீக அருளொளி மிளிரட்டும்

கயமை எனும்பெரும் காரிருள் நீங்கி
மனிதமும் நேயமும் விடியட்டும்
ஒருதாய் மக்கள் நாம்எனச் சொல்லும்
ஒருமைப்பாடுயர்ந் தோங்கட்டும்!

மனிதரை மாய்க்கும் வன்முறைக் கொடுமைகள்
என்றுமே இல்லா தொழியட்டும்!
அன்பும் அறனும் நீதியும் நேர்மையும்
நின்றே உலகினை ஆளட்டும்!

நீர்வளம் நிலவளம் பொருள்வளம் சிறந்து
நானிலம் எங்கும் செழிக்கட்டும்!
சுயநலம் இல்லாப் பிறர்நலம் பேணும்
பேற்றினை உடையோர் வாழட்டும்!

காலத்தைக் கணித்திடும் ஆண்டுகள் யாவும்
நிகழ்வுகள் காட்டிடும் பதிவுகளே!
வரும்புது ஆண்டே! நலன்பல பொழிவாய்!
நிலையாய் உந்தன் பெயரினைப் பதிப்பாய்!





நலிந்தவர்களின் குரலும் கேட்கப்பட வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றது. இது பங்கேற்பாகும்.

**நற்செய்தி அறிவிப்பு**

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட அனைவரும் அவரை நம்புவதோடு, நம்புகின்ற இயேசுவை அனைவருக்கும் அறிவிக்க வேண்டும். தந்தையின் அன்பு முகமான, மன்னிக்கும் முகமான இயேசுவை அனைவரும் உணரச்செய்வது, அனைவருக்கும் காட்டுவது, நற்செய்திக்கு சான்று பகர்வது, நற்செய்தியாக மாறுவது. இத்தகைய மூன்று கூறுகளையும் தன்னகத்தே கொண்டு வாழ்ந்தவர் அன்னை மரியா. எனவே கூட்டியக்கத் திருஅவையின் முப்பரிமாணங்களை நாம் சிறப்பாக வாழ நமக்கு சிறந்த எடுத்துகாட்டாக நமது அன்னை மரியா விளங்குகின்றார்.

**கூட்டியக்கத் திருஅவையில் மரியா**

அன்னை மரியா இறைவனோடு எப்போதும் ஒன்றித்திருந்தார். இறைவனின் அருளை நிறையப் பெற்றிருந்தார். “அருள் நிறைந்த மரியே வாழ்க ஆண்டவர் உம்முடனே” என்ற வானதூதரின் வாழ்த்திலிருந்து நம் அன்னை இறைவனுடைய கண்களில் பேறுபெற்றவராக இருந்தார் என்பதை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறது. எலிசபெத்து, மரியாவை இறைவனின் தாயாகப் போற்றும் பொழுது மரியா அனைத்துப் புகழையும் இறைவனுக்கு அர்ப்பணித்து “எனதான்மா ஆண்டவரை ஏற்றிப் போற்றுகின்றது என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் களிகூறுகின்றது” என்று பாடுகிறார். அன்னை மரியா ஏழை எளியவர்கள் மீது அதிக அன்பும் அக்கறையும் கொண்டிருந்தார் என்பது அவரின் விடுதலைக் கீதத்திலிருந்து தெளிவாகிறது. ஏழை எளியவர் உயர்த்தப்பட வேண்டும், பசித்தவர்கள் வயிறார உண்ண வேண்டும், சமுதாயத்தில் அடித்தளத்தில் இருப்பவர்கள் உயர்த்தப்பட வேண்டும் என்று இறைவனிடம் குரல் எழுப்பிக் கூறினார்.

வயது முதிர்ந்த தனது உறவினர் எலிசபெத்துக்கு உதவி செய்ய யூதேய மலை நாட்டிற்கு விரைந்து சென்றார். நிறை கர்ப்பிணியாக இருந்த அவருக்கு அனைத்து உதவிகளையும் செய்து மூன்று மாத காலம் உடனிருந்து இல்லம் திரும்பினார். கானாவூர் திருமணத்தில் திராட்சை இரசம் குறைவுபட்டபோது அதை முதலில் உணர்ந்து கொண்டவர் நம் தாய்மரியா. உடனே தன் மகனிடம் விரைந்து சென்று அக்குறையினைப் போக்க பரிந்துரைத்தார். திராட்சை இரசம் அதிகமாகவே திருமண வீட்டிலே பரிமாற உதவியாக இருந்தார். இவ்வாறு தேவையில் இருப்பவரின் குறையை நீக்கும் மரியாவை நாம் இங்கு காண்கின்றோம். இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் சிதறிக்கிடந்த சீடர்களை எல்லாம் ஒன்று சேர்த்த பெருமை நம் அன்னையைச் சாரும். எனவே அவரை திருச்சபையின் தாயாக, அரசியாக, தலைவியாக, முன்மாதிரிகையாக திருத்தந்தையர் தம் நூல்களில் எடுத்துரைக்கின்றனர்.

லூக்கா தமது திருத்தூதர் பணிகள் நூலில் தூய ஆவியாரின் வருகைக்காக அன்னை மரியாவும், திருத்தூதர்களும் ஒருசில பெண்களுடன் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக்கெண்டிருந்தார்கள் என்று கூறுகிறார்(1:14). தொடக்காலத் திருஅவையின் உருவாக்கத்திலும், உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலும், வேகமாக பரவிய நிலையிலும் அன்னை மரியா தனது பங்களிப்பை முழுமையாக கொடுத்திருக்க வேண்டும். பெந்தகோஸ்து நாளில் தூய ஆவியாரைப் பெற்ற காட்சியை நாம் பார்க்கும்போது அன்னை மரியா திருத்தூதர்களின் மத்தியில் அமர்ந்திருப்பதைக் காணலாம். திருத்தூதர்கள் மரியாவுக்கு கொடுத்த உயரிய நிலையை இது எடுத்துக்காட்டுகிறது. தூய ஆவியாரைப் பெற்ற திருத்தூதர் பல இடங்களுக்கும் சென்று பல இன்னல்களுக்கு மத்தியில் நற்செய்தியை வேகமாகப் பரப்பினர். திருத்தூதர்களோடு தூய ஆவியாரைக் கொடையாகப் பெற்ற மரியா, உறுதியாக இந்த பணியிலே ஈடுபட்டு

இருந்திருப்பார். பல வகையான இடங்களுக்கு இயேசுவின் இடத்தில் இருந்து திருத்தூதர்களை அனுப்பி இருந்திருப்பார். ஆதி கிறிஸ்தவர்களின் வாழ்வை வடிவமைத்துக் கொடுத்திருப்பார். ஏனென்றால் அவர் இறை வார்த்தையை முழுமையாக நம்பி வாழ்ந்தவர். இறைவனின் திருச்சட்டங்களையும் இயேசுவின் நற்செய்தியையும் முழுமையாக வாழ்ந்தவர் மரியா.

ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு என்று கூட்டியக்கத் திருஅவையின் மூன்று கூறுகளையும் அன்னையின் வாழ்வில் முழுமையாக காண முடிகிறது. தமது வார்த்தையாலும் வாழ்வாலும் இறைவனின் அன்பு முகத்தை, கருணை நிறைந்த முகத்தை உணர்த்துபவராகவே அவர் இருந்தார். ஒப்பற்ற சீடத்தியாக கல்வாரி மலை வரை சிலுவை சுமந்து சென்ற மீட்பரைப் பின் தொடர்ந்தார். மீட்பின் பயன்களை அனைவரும் பெற்றுக்கொள்ள இயேசுவோடு உடன் இரட்சகியாக சிலுவை அடியில் நின்றார். திருஅவையின் அனைத்து மக்களுக்கும் தாயாகும் பெரும் பேற்றினை பெற்றார். எனவே அன்னை மரியாவை கூட்டியக்கத் திருஅவையின் மரியா என்றால் மிகவும் பொருத்தமானது.

**அன்னை மரியா கற்றுத் தரும் பாடங்கள்**

கூட்டு இயக்கத் திருஅவையின் மரியா நமக்கு பல பாடங்களை கற்றுத் தருகிறார். அவருடைய எடுத்துக்காட்டான வாழ்க்கை திருமுழுக்கு பெற்ற அனைவருக்கும், அர்ப்பணிக்கப்பட்டோருக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. நமது அன்னையைப் பின்பற்றி நாமும் இறைவனை அன்பு செய்ய கற்றுக் கொள்வோம். அவருடைய அன்பில் நிலைத்திருக்க கற்றுக் கொள்வோம். இறைவன் என்னை அன்பு செய்கின்றார் என்ற உணர்வில் அவரில் நம்பிக்கையோடு வாழ்வோம். அவர் மகன் இயேசு விட்டுச் சென்ற இறையாட்சியின் விழுமியங்களான சமத்துவம், சகோதரத்துவம், நீதி, உண்மை, விடுதலை ஆகியவற்றை ஒவ்வொருவரும் வாழ்ந்து இறையாட்சியின் குடும்பங்களைக் கட்டி எழுப்புவோம். திருஅவை ஒரு இறையாட்சிக் குடும்பமாக மாற வேண்டும் என்பதே தூய ஆவியானவரும் நமக்கு விடுக்கும் அழைப்பு. அவர் திருஅவையின் முகத்தைப் புதுப்பித்து கொண்டே இருக்கின்றார். இயேசுவின் அன்பின் சாயல், இரக்கத்தின் சாயல், மன்னிப்பின் சாயல் வெளிப்படுவதை உணர்ந்து கொள்வோம். நம்மோடு இருக்கும் ஏழை எளியவர், ஒடுக்கப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் அனைவரோடும் தோழமை உணர்வு கொண்டு, அவர்களை நமது நிறுவனங்கள், பங்குகள், அன்பியங்கள் ஆகியவற்றின் மையத்திற்கு கொண்டு வருவோம். அவர்கள் மதிப்பு உள்ளவர்கள், மாண்புள்ளவர்கள் என்பதை உணரச்செய்வோம். இவ்விதமாக உயிருள்ள நற்செய்தியாக, இயேசுவுக்கு சாட்சிகளாக, இந்த உலகில் வலம் வருவோம்.

**நிறைவுரை**

நற்செய்தி காட்டும் மரியாவை பின்பற்ற முயற்சி எடுப்போம், தேவையில் இருப்போருக்காக இறைவனிடம் பரிந்து பேசுவோம், அவர்களுக்கு உதவி செய்ய விரைந்திடுவோம். கிறிஸ்தவ வாழ்வு என்பது மகிழ்ச்சி நிறைந்த வாழ்வு, மற்றவர்களுக்கு பணி செய்வதில், அக்கறை காட்டுவதில் மகிழ்ச்சி காண்போம். இவ்வாறு அடுத்தவரை நினைப்போம், அக்கறை கொள்வோம், நோயுற்றோரை சந்திப்போம், உறவுகள் உடைமைகளின்றி தவிப்போருக்கு ஆறுதல் கூறுவோம். இத்தகைய வாழ்வால் கூட்டியக்கத் திருஅவையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவோம், தலத்திரு அவையின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டுவோம், அர்த்தமுள்ள வகையில் வழிபாடுகளில் பங்கேற்று, இறையாட்சி இம்மண்ணில் மலர, புதிய வானகமும், புதிய பூமியும் உருவாக சிறந்த கருவிகளாக நம்மை இறைவனுக்கு அர்ப்பணிப்போம். அன்னை மரியின் சீடத்துவ வாழ்வை நாமும் சிறப்பாக வாழ்ந்து, கூட்டியக்கத் திருஅவையின் நோக்கத்தை நிறைவேற்றுவோம்.





சம்பாதிக்கின்றபோதும், பணம் இல்லாமல் வறுமையில் வாடும்போதும், மகிழ்ச்சியான நேரத்திலும், துன்பகரமான நேரத்திலும் என எல்லாச் சூழ்நிலையிலும் பிரமாணிக்கம் தவறாமல் வாழவேண்டும்.

நம் குடும்ப வாழ்வில் நாம் ஒருவருக்கொருவர் பிரமாணிக்கத்தோடு வாழ்வதற்கு திருக்குடும்பத்தின் தலைவர்களாகிய அன்னை மரியாவும், புனித யோசேப்பும் முன்மாதிரியாக இருக்கின்றார்கள். அவர்கள் இருவரும் எல்லாச் சூழ்நிலையிலும் பிரமாணிக்கத்தோடு வாழ்ந்தார்கள். கற்பு நெறியைக் கடைபிடித்தார்கள்; பரிவன்புடன் ஒருவர் மற்றவரைத் தாங்கினார்கள்; பெருந்தன்மையோடு ஒருவர் மற்றவருக்குப் பணிந்தார்கள். தங்கள் குடும்ப வாழ்வில் இயேசுவின் பொருட்டு பல்வேறு துன்பங்களை சந்திக்க நேர்ந்தபோதும் அவர்கள் தங்களது பிரமாணிக்கத்தில் தவறவில்லை. "எனக்கு நீ வேண்டாம், நான் ஏன் துன்பப்பட வேண்டும்? இது உன்னுடைய கடமை. எனக்கு எந்த சம்பந்தமும் இல்லை. எனக்கு என்னுடைய மகிழ்ச்சிதான் முக்கியம்" என்று புனித யோசேப்பு நினைக்கவில்லை. மரியாவும் தம் கணவர் யோசேப்பு மீது எந்த வெறுப்பும் கொள்ளாமல் எப்பொழுதும் அன்புடனே வாழ்ந்திருக்கிறார். கணவன் மனைவியாக அன்னை மரியாவும், புனித யோசேப்பும் ஒருவர் மற்றவருக்கு எப்பொழுதும் பிரமாணிக்கத்தோடு வாழ்ந்தார்கள். இவர்களைப் பின்பற்றி கத்தோலிக்க குடும்பத் தலைவர்களாகிய கணவன் மனைவி ஒருவருக்கொருவர் பிரமாணிக்கத்தோடு வாழவேண்டும். இவர்களுடைய வாழ்க்கையில் பிரச்சினை வரும்போதேல்லாம் யாரிடமும் சென்று புலம்பவில்லை. யாரையும் பஞ்சாயத்திற்கும் அழைக்கவில்லை. இருவரும் பேசித் தீர்த்துக்கொண்டார்கள்; திருக்குடும்ப வாழ்க்கையை சிறப்பாக வாழ்ந்தார்கள்.

ஆனால் இன்று நம் குடும்ப வாழ்வில் ஏதாவது சிறிய பிரச்சினை வந்தால், கணவன் மனைவியரில் யாராவது ஒருவருக்கு தீராத நோய் வந்தால் இந்த திருமண வாழ்க்கையை வெறுத்துவிடுகின்றோம். நம்மைப் பெற்றவர்களிடமும், மற்றவர்களிடமும் புலம்புகிறோம். இக்குடும்ப வாழ்க்கை வேண்டாம் என்று பிரிந்து வாழ முயற்சிக்கின்றோம். திருமண நாளின்போது நாம் கொடுத்த வாக்குறுதிக்கு பிரமாணிக்கமாக இருக்கத் தவறிவிடுகின்றோம். திருமண வாக்குறுதி என்பது நாம் மனமுவந்து சுயவிருப்பத்தோடும், சுயசிந்தனையோடும் கொடுப்பது. எனவே, அவ்வாக்குறுதிக்கு எப்பொழுதும் பிரமாணிக்கத்தோடு வாழவேண்டும். மேலும் நம் குடும்ப வாழ்க்கையில் பிரச்சினை வருவதற்கு காரணம் நம்பிக்கையின்மை. இந்த நம்பிக்கையின்மையானது இரண்டு காரணங்களுகக்காக வருகிறது. முதலாவதாக கணவனும் மனைவியும் தாம்பத்திய உறவில் உண்மையில்லாமல் இருக்கும்போதும், இரண்டாவதாக பணம் சம்பந்தப்பட்ட காரியத்தில் உண்மையில்லாமல் இருக்கும்போதும் சந்தேகம் வருகிறது. இந்த இரண்டிலும் நம்பிக்கை இல்லாதபோது குடும்பத்தில் ஏராளமான பிரச்சினைகள் வருகிறது. எனவே தாம்பத்தியத்திலும், பணத்திலும் ஒருவர் மற்றவருக்கு உண்மையுள்ளவர்களாக வாழுகின்றபோது பிரமாணிக்கம் முறிவுபடாமல் நாம் காக்க முடியும். நாமும் மற்றவர்கள் நம் குடும்பத்தை குறை சொல்லாதவாறு மேன்மைமிக்க குடும்பமாக வாழ முடியும். இதையே திருவள்ளுவரும்,

**"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அ∴தும்**
**பிறன்பழிப்பது இல்லாயின் நன்று"** (குறள் 49) என்கிறார்.

அறம் என்பது வாழ்க்கை நெறி. அறமின்றித் தீய நிலையில் இருப்பின் அது இல்லறமாகாது. இல்லறம் பிறர் பழி சொல்லக் கூடிய அளவிற்கு அமையலாகாது. எனவே, எல்லாச் சூழலிலும் அன்னை மரியாவைப் போல, புனித யோசேப்பைப் போல ஒருவருக்கொருவர் பிரமாணிக்கத்தோடு நடந்து நல்ல இல்லற வாழ்க்கை வாழ்வோம்; விவாகரத்தைத் தவிர்ப்போம்.



# குடும்ப வாழ்வில் மரியா 11

அருள்பணி. கில்பர்ட்ராஜ் ம.ஊ.ச
சோழிங்கநல்லூர், சென்னை

## மரியா குடும்பத்தில் பிரமாணிக்கம்

பிரமாணிக்கம் என்பது உண்மைத்தன்மை மற்றும் பற்றுறுதி ஆகும். விவிலியத்தில் இஸ்ராயேல் மக்களை கடவுள் வல்லமையோடு எகிப்தின் அடிமைத்தளையிலிருந்து மீட்டு வந்தபோதும் அவர்கள் தங்கள் சுயவிருப்பத்தை நிறைவேற்றுவதற்காக கடவுளுக்கு துரோகம் செய்தார்கள். தங்களை மீட்டு வந்த கடவுளுக்கு பிரமாணிக்கமாக இல்லை. இறைவாக்கினர் யோசுவாவிடத்தில் “நாங்கள் ஆண்டவருக்கே ஊழியம் புரிவோம்” (யோசுவா 24:21) என்று சொன்னார்கள். ஆனால் ஆண்டவருக்குத் துரோகம் செய்து வேற்று தெய்வங்களை வழிபட்டார்கள். ஆனால் கடவுள் எப்பொழுதும் தம்முடைய வாக்குறுதிக்கு பிரமாணிக்கமாக இருந்தார். “உங்களை நான் என் மக்களாகத் தேர்ந்தெடுப்பேன். உங்களுக்குக் கடவுளாக நான் இருப்பேன்” (விப 6:7) என்று இஸ்ராயேல் மக்களைத் தேர்ந்தெடுக்கும்போது கூறிய கடவுள் எப்பொழுதுமே தம்முடைய வாக்குறுதிக்குப் பிரமாணிக்கமாக இருந்திருக்கிறார்; இன்றும் இருக்கிறார். பிரமாணிக்கமாக இருக்கும் கடவுள் தம்முடைய மக்களும் பிரமாணிக்கமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். அதிலும் குறிப்பாக திருமணமான கணவன் மனைவி இருவரும் ஒருவர் மற்றவருக்கு எப்பொழுதும், எல்லாச் சூழ்நிலையிலும் பிரமாணிக்கமாக இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றார். அதனால்தான் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டை தொடக்கத்திலேயே ஆணையும் பெண்ணையும் படைக்கும்போதே மனுக்குலத்திற்கு வகுத்துக் கொடுத்தார்.

ஆணும் பெண்ணும் திருமணம் என்ற பந்தத்தில் இணைந்து ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற கோட்பாட்டில் பிரமாணிக்கத்தோடு வாழ வேண்டும். பிரமாணிக்கம் என்பது ஒருமை, திருமணக் கற்பு, பரிவன்பு, பெருந்தன்மையும், கௌரவமும் நிறைந்த பணிவும் ஆகும். தூய பவுல், “ஆண்கள் ஒவ்வொருவரும் தம் சொந்த மனைவியோடேயே வாழவேண்டும்: பெண்கள் ஒவ்வொருவரும் தம் சொந்தக் கணவரோடேயே வாழ வேண்டும்” (1கொரி 7:2) என்று கூறுவது போல கணவன் மனைவி ஒருவருக்கொருவர் பிரமாணிக்கத்தோடு வாழ வேண்டும். அதுதான் உண்மையான மகிழ்ச்சி நிறைந்த குடும்ப வாழ்க்கை.

திருமணத்தின் போது ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் “இன்பத்திலும் துன்பத்திலும் உடல் நலத்திலும் நோயிலும் நான் உனக்குப் பிரமாணிக்கமாயிருந்து என் வாழ்நாளெல்லாம் உன்னை மதிக்கவும் நேசிக்கவும் வாக்களிக்கின்றேன்” என்ற திருமண வார்த்தைப்பாட்டைக் கொடுக்கின்றார்கள். இந்த வார்த்தைப்பாட்டிற்கு எப்பொழுதும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். உடல் ஆரோக்கியத்தோடு வாழும்போதும், நோயினால் பாதிக்கப்படுகின்ற போதும், கைநிறைய பணம்





# அன்னையின் 49 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## புனித அலங்கார அன்னை ஆலயம் வரதராஜன்பேட்டை

கிறிஸ்துவை இந்தியாவிற்கு அறிவிக்க வந்த வேதபோதகர்களில் முக்கியமானவரும், தமிழ் மொழிக்கு அளப்பரிய தொண்டாற்றியவருமான வீரமாமுனிவர் என்றழைக்கப்படும் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி கி.பி. 1709 ஆம் ஆண்டு இயேசு சபையில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இந்தியாவில் மறைப்பணிக்கான தேவை அதிகமாய் இருப்பதை உணர்ந்து, தானும் இந்தியா செல்ல வேண்டும் என்று ஆவல் கொண்டார். தனது பொறுப்பாளர்களின் அனுமதி பெற்று கி.பி. 1710 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கோவா வந்தடைந்தார். மறைப்பணிக்காக இந்திய மொழிகளை கற்க ஆவல் கொண்டார். தமிழ், தெலுங்கு மற்றும் சமஸ்கிருதம் போன்ற மொழிகளை கற்றுத் தேர்ந்தார். கி.பி. 1711ஆம் ஆண்டு மே மாதம் மதுரை மறைப்பணித்தளத்தில் பணிபுரிய மதுரை வந்தடைந்தார். தமிழகத்தின் பல்வேறு இடங்களில் அயராது பணியாற்றினார். இவர் காமநாயக்கன்பட்டி, ஏலாக்குறிச்சி, கோனாங்குப்பம், அய்யம்பேட்டை (தற்போதைய வரதராஜன்பேட்டை), திருச்சி, ஆவூர், தஞ்சாவூர் என பல இடங்களில் பணியாற்றினார். தான் பணியாற்றிய இடங்களில் எல்லாம் மக்களின் ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார். மக்கள் கூடிவந்து செபிப்பதற்காகவும், நற்கருணை கொண்டாட்டத்தில் பங்கேற்பதற்காகவும் எல்லா இடங்களிலும் ஆலயங்களை எழுப்பினார். அப்போது நிலவிய அரசியல் சூழலில் பல இடங்களில் கிறிஸ்தவர்கள் பல இன்னல்களை அனுபவித்தனர். ஆலயங்கள் தகர்க்கப்பட்டன. இச்சூழலில் இஸ்லாமிய படைத்தளபதியான சந்தா சாகிப்பின் நண்பராகி, அவரின் உதவியுடனும், பாதுகாப்புடனும் பல இடங்களில் ஆலயங்களை நிறுவினார்.

அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் வரதராஜன்பேட்டை இன்று பேரூராட்சியாக உள்ளது. நீர்மட்டம் குறைந்த செம்மண் திட்டுகளும், மஞ்சள் கல் பாறைகளும், சுண்ணாம்புப் பாறைகளும் நிரம்பிய பகுதி இது. 15-16ஆம் நூற்றாண்டுகளில் சோழப் பேரரசு பலம் குன்றிய பிறகு, நாயக்கர்கள் ஆட்சியின் கீழ் இப்பகுதி இருந்தது. காஞ்சியில் ஆண்ட தலைவன் ஒருவனுக்கு செயங்கொண்டசோழபுரத்தை ஒட்டிய பகுதிகள் பரிசாக அளிக்கப்பட்டன.



படைத்தலைவனான அவன் அப்பகுதிக்கு உடையார்பாளையம் என்று பெயரிட்டு, செஞ்சியிலிருந்து பிரித்தான். செஞ்சிக்கும் உடையார்பாளைய அரசுக்கும் 200 ஆண்டுகால பிணக்கு தொடர்ந்தது. இரு நாடுகளின் எல்லைகள் சந்திக்கும் ஊரான செஞ்சியைச் சேர்ந்த கொழை என்ற சிற்றூரில் இருநாட்டுப் பொருட்களும் எடை போடப்பட்டு வரி விதிக்கப்பட்டது. இவ்வூர் சாவடிக்குப்பம் எனவும் அழைக்கப்பட்டது.

கி.பி. 1585ஆம் ஆண்டு துணி வணிகத்தில் ஈடுபட்டிருந்த பரங்கிப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்ட போர்ச்சுக்கீசியருடன், பிரான்சிஸ்கன் மிசனரி குருக்கள் பயணித்து வந்தனர். அவர்கள் செல்லும் இடமெல்லாம் இந்த குருக்கள மறைபரப்பு பணி செய்தனர். அவ்வாறு, கி.பி. 1585ஆம் ஆண்டில் பிரான்சிஸ்கன் துறவியான நிக்கோலாஸ் பிமெந்தா இப்பகுதியில் முதல் கிறிஸ்தவர்களை மனம் மாற்றினார் எனச் சொல்லப்படுகிறது. கி.பி. 1585 - 1600 ஆண்டுகளில் அய்யம்பேட்டை, கொழை பகுதிகளில் பலரை பிரான்சிஸ்கோ ஓரியந்தோ என்ற மறைபரப்பாளர் மதம் மாற்றியதாகவும் தெரிகிறது. ஆரம்பம் முதலே கொழை பகுதியில் இருந்த இயேசு சபை குருக்களால் மதமாற்றம் அடைந்த கிறிஸ்தவர்களுக்கும், அய்யம்பேட்டையில் பிரான்சிஸ்கன் குருக்களால் மதமாற்றமடைந்த கிறிஸ்தவர்களுக்கும் இடையே சரியான ஒத்துழைப்போ, ஒருங்கிணைப்போ இல்லை. இந்த கொழை பகுதியில்தான் இயேசு சபை குருவான அருளானந்தர் தன் முதல் மறைபரப்புப் பணியைத் தொடங்கினார்.

தன்னுடைய பணிவாழ்வின் தொடக்கமாக வீரமாமுனிவர் அய்யம்பேட்டையில் அதாவது, வரதராஜன்பேட்டையில் பங்குத் தந்தையாக கி.பி. 1711 முதல் கி.பி. 1712 வரை பணியாற்றியிருக்கிறார். கொழை மற்றும் அய்யம்பேட்டை பகுதி கிறிஸ்தவர்களை ஒருங்கிணைத்து ஒரே பங்கின் கீழ் கொண்டுவருவதில வெற்றிபெற்றார். பங்குத் தளமாக அய்யம்பேட்டையை மாற்றி, சமய சடங்குகளாற்றவும், ஊர் நடைமுறைகளை ஒழுங்குசெய்யும் நாட்டார் பெறுப்பை கொழை மக்களுக்கும் அளித்தார். மேலும், இப்பணித்தளத்தின் மீது கொண்டிருந்த அன்பின் காரணமாக கி.பி. 1742 ஆண்டுவரை பலமுறை இங்கு வந்து மக்களை சந்தித்திருக்கிறார். ஏலாக்குறிச்சியில் பணியாற்றிய போது அவர் அடிக்கடி அய்யம்பேட்டை வழியாக தஞ்சை சென்று வந்ததாக தெரிகிறது. அய்யம்பேட்டை அருகே "வீரமாமுனிவர் வெட்டி" என்ற பகுதி இருப்பதாக கூறப்படுகிறது.

கி.பி. 1711ஆம் ஆண்டு ஆற்காடு நவாப்பின் உதவி பெற்று அய்யம்பேட்டையில் கோயிலை கட்டிமுடித்தார். இக்கோயிலானது காரை, கடுக்காய், சுண்ணாம்பு, வெல்லம் சேர்த்தறைத்து கட்டப்பட்டது. இக்கோயிலானது சிலுவை வடிவிலும், புறா வடிவிலும் அமைந்துள்ளது. இரு சிறகுகளும், வால்புறமும், தலைப்புறமும் புலப்படுமாறு கோவில் அமைப்பது இவரது வழக்கமாக இருந்துள்ளது. முப்புறமும் மக்கள் அமர்ந்து திருப்பலி காண்பதும், தலைப்புறத்தில் திருப்பலி உடைகள், பாத்திரங்கள் வைக்கவும் ஏற்ற வகையில் அமைத்துள்ளார். இந்த ஆலயத்தில் அலங்கார





மரியாவை திருச்சபையின் தாய் எனத் திருத்தந்தை அறிக்கையிட்டதன் முக்கிய நோக்கம் இத்தகையோரது விருப்பங்களை வேறு ஒரு முறையில் நிறைவேற்றி வைப்பது எனலாம்.

**தாய் என்றாலும் அவர் மகளே**

திருத்தந்தை இரண்டு முக்கிய அர்த்தங்களில் மரியாவை திருச்சபையின் தாய் என அழைக்கின்றார். முதலில், திருச்சபை இயேசுவின் மறையுடல் என்னும் வகையில் அவருக்குத் தாயான மரியா ஒருவகையில் அதற்கும் தாயே. இரண்டாவது, மரியா திருச்சபையின் மாதிரி. அதாவது, திருச்சபையின் இயல்பை மரியா தன்னில் மிகச் சிறப்பாக பிரதிபலிப்பவர்; அதன் பண்புகளுக்கும் பணிகளுக்கும் ஒப்பற்ற ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்பவர். அவரிடத்தில் திருச்சபை தனது சீடத்துவ அழைப்பை முன்னறிகிறது. தனக்கு உரிய முழுமையான சிறப்பின் முன்னாக்கம் பெறுகிறது. "தனது இவ்வுலக வாழ்வின் போது மரியா இயேசுவின் சீடரது நிறைவான வடிவாக விளங்கினாள். இதனால் அவரிடம் முழுத்திருச்சபையும் கிறிஸ்துவை நிறைவாகப் பின்பற்றுவது மிகவும் உண்மையான உருவை அடைந்தது" என இதே கருத்தினை திருத்தந்தை எடுத்துரைக்கின்றார். இவ்வாறு தனது முழு இயல்பின் பிரதிபலிப்பும் முன்னோக்கமும் ஆன மரியாவை திருச்சபை என்றும் பின்பற்றி அவர் உருவிலேயே தானும் வளருவதால் திருச்சபையின் தாய் என திருத்தந்தை அழைக்கின்றார்.

மரியாவை திருச்சபையின் தாய் என்று அழைக்கும்போது அவரை திருச்சபையைவிட உயர்வாக, அதற்குப் புறம்பாக வைத்துப் பார்த்திடும் தவறு ஏற்பட இடம் உண்டு. இதனால்தான் மரியா திருச்சபையின் தாய் எனினும் அதன் ஒரு உறுப்பு, உட்பகுதி என்பதைத் திருத்தந்தை வலியுறுத்தி கூறுகின்றார். அவரை திருச்சபையின் "மிகப்பெரிய மிகச்சிறந்த, மிக முக்கிய, மிகத் தெரிந்து கொள்ளப்பட்ட பகுதி" (Bold letters) என வருணிக்கின்றார். மேலும் மரியாவை திருச்சபையின் தாய் என்று அறிக்கையிட்ட அதே உரையிலே, அவரை நம் சகோதரி என திருத்தந்தை ஒப்பிடுகின்றார். "நம்மைப் போல அவருக்கு ஆதாமின் மகள் என்பதால்........அவர் நமக்கு சகோதரி என்பது திருத்தந்தையின் கூற்று. இவ்வாறு மரியா ஒரு வகையில் திருச்சபையின் தாய் என அழைக்கப் பெற்றாலும் அவரும் நம்மைப்போல திருச்சபையின் மகளே அதன் மாதிரி என்றாலும் அவர் திருச்சபையின் உறுப்பினரே

திருமணப் பகுதியில் திராட்சை ரசம் நற்கருணைக்கும் அதனை மையமாகக் கொண்ட திருச்சபைக்கு அடையாளம் ஆகும். திராட்சை ரசம் கிடைக்க காரணமாக காட்டப்படுவதின் வழி திருச்சபை தோன்ற காரணமானவை அதன் தாய் எனவும் மரியா காட்டப்படுகின்றார் என எண்ண இடமிருக்கிறது. கல்வாரி காட்சியில் "அன்பு சீடர்" உண்மை விசுவாசிகளை குறிக்கும் ஒரு உருவகமாக பார்க்கப்படுகின்றார். அவருக்குத் தாயாக தரப்படும் மரியா அவர் குறித்து நிற்கும் விசுவாசிகளின் கூட்டமாகும் திருச்சபைக்கும் தாய் எனவும் கருதப்படலாம்.

திருச்சபையின் தந்தையர்கள் எவரும் மரியாவை திருச்சபையின் தாய் என அழைத்ததாக தெரியவில்லை. அவர்களுடைய எழுத்துக்களிலும் இக்கருத்திற்கு அதிக இடமில்லை. 12ம் நூற்றாண்டிலிருந்துதான் இச்சிறப்புப் பெயர் அதிகமாக பயன்படுத்தப்பட்டது. இருப்பினும் 20 ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கூட இது மிகப் பரவலாக இருந்தது என்று சொல்வதற்கில்லை. ஆனால் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் இரண்டாம் அமர்வில் சங்கத் தந்தையர்களின் ஆய்வுக்குத் தரப்பட்ட ஒரு தயாரிப்புத்தான் "மரியா-திருச்சபையின் தாய்" என்ற தலைப்பைக் கொண்டிருந்தது. சங்கத் தந்தையர் பலரின் பரிந்துரைக்கு ஏற்ப அது திருத்தியமைக்கப்பட்டு, மூன்றாம் அமர்வின்போது மீண்டும் அவர்கள் முன் வைக்கப்பட்டபோது அந்த சிறப்புப் பெயர் ஏட்டின் தலைப்பிலோ, உட்பகுதியிலோ இடம்பெறவில்லை. அக்கருத்து மட்டும் ஏட்டில் உள்ளிணைக்கப்பட்டிருந்தது. "கத்தோலிக்க திருச்சபையும் தூய ஆவியினால் கற்பிக்கப்பட்டு, பிள்ளைக்குரிய வாஞ்சையோடும் பற்றோடும் அன்பு மிகும் தாயாக அவரை ஏற்கின்றது" (காண் திருச்சபை எண் 53). அந்த தலைப்பை மாற்றியதற்குத் தயாரிப்புக் குழு தந்த முக்கிய காரணங்கள் இரண்டு; ஒன்று, கிறிஸ்தவ மரபில் அச்சிறப்பு பெயர் அதிகம் இடம் பெறவில்லை என்பது. அதைப் பயன்படுத்துவது கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கு தடையாகலாம் என்பது.

ஆனால் சங்கத் தந்தையர் சிலர் அச்சிறப்புப் பெயர் விடப்பட்டதை எதிர்த்தனர். மேலும் மரியா பற்றிய ஏடு திருச்சபை ஏட்டுடன் இணைக்கப்பட்டதும் பலருக்கு ஏமாற்றம் அளித்த முடிவு. மரியா பற்றிய தனி ஏடு இல்லாதது அவரது மாண்பையும் முக்கியத்துவத்தையும் மழுங்கடிப்பது என அவர்கள் எண்ணினர்.





அன்னை வீற்றிருந்து மக்களின் வேண்டுதல்களை தன் திருமகனிடம் பரிந்து பேசி பெற்றுத் தருகிறார். இக்கோயிலை மையமாகக் கொண்டு ஊரின் தெருக்கள் அமைந்துள்ளன. வீரமாமுனிவர் காலத்திலேயே இவ்வூரில் மூவாயிரத்திற்கு குறையாமல் கிறிஸ்தவர்கள் வாழ்ந்துள்ளனர்.

ஆலய முகப்பில் உள்ள கல்வெட்டில், அலங்கார அன்னை ஆலயம், பழைய கோயில் - வரதராஜன்பேட்டை, புனிதப்படுத்தித் திறந்துவைத்தவர் அருட்திரு. ஏ. சந்தியாகு அவர்கள். நன்கொடையாளர்கள் ஊர் பொதுமக்கள், 23.04.2003, அந்தோணி சாலமோன், பங்குத் தந்தை வரதராஜன்பேட்டை, என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பழைய ஆலயமானது வளைவுகள் கொண்ட கட்டிட அமைப்புடனும், குவிந்த கூரை மற்றும் பிரமாண்ட சன்னல்களைக் கொண்டுள்ளது. ஆலயத்தின் பக்கவாட்டுச் சுவரில் பாடுபட்ட சுரூபம் ஒன்று கவனத்தை ஈர்க்கிறது. மரத்தால் அமைந்துள்ள அச்சுரூபம் கண்கள் அசையுமாறு அமைக்கப்பட்டுள்ளது. பீடத்தின் முன்புள்ள மேடையில் மற்றொரு பாடுபட்ட சுரூபம் படுக்கவைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள பலிப்பீடம் தனிச்சிறப்பம்சம் வாய்ந்ததாக உள்ளது. பிரமாண்டமான குவிமாடத்தின்கீழ், அதன் முழு உயரத்தையும் எட்டுமளவுக்கு போர்த்துக்கீசிய பாணியில் கட்டப்பட்டுள்ளது. போர்த்துக்கீசிய காதிக் கட்டிட பாணியோடு இயைந்து வந்த பரோக் பாணி பொன்னிற வேலைப்பாடு காண்போரின் கண்களை பறிப்பதாக அமைந்துள்ளது.

தங்க வண்ணத்தில் கொடிகள், இலைகளோடு பீடத்தின் மேல்பகுதியில் கைவேலைப்பாடுகளாக அமைந்துள்ளன. அதன் நடுவே மாடத்தில் அலங்கார அன்னையின் சுரூபம் உள்ளது. சுரூபத்தின் கீழுள்ள பகுதி நான்கு "அயனிக்" பாணித் தூண்களால் பிரிக்கப்பட்டு, அதில் மலரிதழ் வடிவில் மூன்று மாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் நடுமாடத்தில் அன்னையின் சுரூபமும், இடப்புறம் வனத்துச் சின்னப்பர் மற்றும் வலதுபுறத்தில் புனித சூசைப்பர் சுரூபமும் வைக்கப்பட்டுள்ளன.

இந்த மேல் மாடத்துக்கும் கீழ் மாடத்துக்கும் இடையே உள்ள பட்டையான பகுதியில் பொன்னிற புடைப்புச் சிற்ப வேலைப்பாடு உள்ளது. அதில் தூய ஆவியை குறிக்கும் புறா, இருபுறமும் கொடிகளுக்கு இடையே தாடியுடன் உள்ள தந்தையாம் கடவுளின் ஆசிவழங்கும் கை, மீட்பராம் இயேசுவை குறித்துக் காட்டும் திராட்சை இரசக்கிண்ணம், இரட்டை ஏணி அவற்றின் குறுக்கே வைக்கப்பட்டுள்ள ஈட்டி மற்றும் சிலுவை, குறுக்குவாட்டில் சுத்தியல்



மற்றும் இடுக்கி, மூன்று ஈட்டிகள், நற்கருணைப் பேழை, அதன் இருபக்கமும் சேவல் மற்றும் தலைகவிழந்திருக்கும் கதிர் போன்றவை படைப்புச் சிற்பங்களாக பொன் வண்ணத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியின் கீழ், வலது மற்றும் இடது மாடங்களின் மேல் கிரீடத்துடன் கூடிய ஆவே மரியா என்ற சின்னமும், இருதயமும் அதன் மேல் சிலுவையும், "இவரே யூதர்களின் அரசன்" எனப்பொருள்படும் ஐ.ஹெச்.எஸ் (IHS) என்ற எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த ஆலயம் 300 ஆண்டுகளுக்கு பழமையானது என இந்த பலிப்பீடத்தைக் கொண்டு கூறிவிடலாம்.

18ஆம் நூற்றாண்டில் இயேசு சபை தடை செய்யப்பட்ட போது, இயேசு சபை குருக்கள் பணித்தளங்களிலிருந்து திரும்பப் பெறப்பட்டனர். அய்யம்பேட்டையில் பணியாற்றிய குருவும் திரும்பப் பெறப்பட்டார். மக்கள் சரியான வழிகாட்டுதலின்றி குழம்பினர். அதன்பின், திருத்தந்தையின் ஆணைப்படி புதுவை பாரீஸ் வேதபோதக சபை குருக்கள் வசம் பங்குகள் அளிக்கப்பட்டன. அய்யம்பேட்டை பகுதி கிறிஸ்தவர்கள் இந்த மாற்றத்தை ஏற்கவில்லை. எனவே, அருகிலிருந்த தென்னூர் பகுதி கிறிஸ்தவர்களை ஒருங்கிணைத்து, கி.பி. 1846ஆம் ஆண்டு முதல் பாரீஸ் வேதபோதக சபை குருக்கள் தென்னூரில் பணியாற்றி வந்தனர். உரோமை விசுவாசம் பரப்புதல் ஆணையத்தின் முழுஆதரவும் தென்னூர் பகுதி மக்களுக்கு கிடைத்தது. அய்யம்பேட்டை கிறிஸ்தவர்கள் மயிலாப்பூர் மறைமாவட்டத்தை சார்ந்த கோவா குருக்களால் நிர்வகிக்கப்பட்டனர்.

கி.பி. 1846ஆம் ஆண்டு முதல் தென்னூர் பாண்டிச்சேரி உயர் மறைமாவட்டத்துடன் இணைக்கப்பட்டது என்றாலும், கி.பி. 1897ஆம் ஆண்டுதான் தனிப்பங்காக உயர்த்தப்பட்டது. கி.பி. 1899ஆம் ஆண்டு கும்பகோணம் மறைமாவட்டம் உருவான பிறகு இரு பங்குகளும் ஒரே நிர்வாகத்தின் கீழ் வந்தன.

மக்கள் தொகை பெருக பெருக புதிய ஆலயத்திற்கான தேவை அதிகமானது. கி.பி. 1907 - 1912ஆம் ஆண்டுகளில் பங்குத் தந்தையாக இருந்த அருட்பணி. ரேய்மண்ட் மிசோத் அடிகளார் ஆலய கட்டுமானத்திற்கான பணிகளை மேற்கொண்டார். கி.பி. 1910ஆம் ஆண்டு குடந்தை ஆயர் ஹியூக் மதலேன் பொத்தேரே ஆண்டகை அவர்கள் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டினார். ஆலயப் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கும் போதே மிசோத் அடிகளார் பணியிடமாற்றம் செய்யப்பட்டார். அவருக்குப் பின் பொறுப்பேற்ற அருட்பணி. இரத்தினம் மற்றும் அருட்பணி. அந்தோணி ஜோசப் அவர்களின் முயற்சியினால் இந்த ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. ஆனால், ஆலயம் கட்டி முடிக்க 45 ஆண்டுகள் ஆயின. அருட்பணி. மரிய பிரான்சிஸ் அடிகள் மற்றும் அருட்பணி. இராயல் அடிகள் காலத்தில் மக்கள் அமர்வதற்கான கல்தளம் இடப்பட்டது.

இந்த ஆலயமும் காதிக் கட்டிட பாணியில் கட்டப்பட்டுள்ளது. பெரும் தூண்கள், பிரம்மாண்ட வளைவுகள், குவிந்த கூரை என பழமையான ஆலயங்களுக்கே உரிய அத்தனை இலக்கணமும் ஒருங்கே அமைந்ததாக உள்ளது. நடுமாடத்தில் அலங்கார அன்னையின் சுரூபம் உள்ளது. மாதா பொன்முடி தரித்து, காலடியில் பூமியும், நிலவும் இருக்கக் கைகூப்பி நிற்கிறார். அவருக்கு இருபுறமும் சிறகு விரித்தபடி இரு சம்மனசுகளின் சுரூபங்கள் உள்ளன. இருபுறமும் மீன் உருவங்கள் ஏந்துவது போல வடிவமைக்கப்பட்ட நற்கருணைப்பேழை பொன்னிற வேலைப்பாடுகளுடன் உள்ளது. பலிப்பீடத்தில் இறுதி இராவுணவு புடைப்புச் சிற்பமாக





# மரியா - கடவுளின் கடிதம்

18



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## திருச்சபையின் தாய்

1964 ஆம் ஆண்டு நவம்பர் 21 ம் நாள் திருத்தந்தை 6-ம் பவுல் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் மூன்றாவது அமர்வை முடித்து வைத்தார். அந்த முடிவுரையில் அவர் மரியாவை "திருச்சபையின் தாய்" என அறிக்கையிட்டார். "மிகத் தூய மரியாவின் மகிமைக்காகவும் நமது ஆறுதலுக்காகவும் அவரை திருச்சபையின் தாய் அதாவது எல்லாக் கிறிஸ்தவ மக்களின் அன்னை என அறிக்கையிடுகின்றோம்" என்பது அவரது அறிக்கையின் முக்கியப் பகுதி.

பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் இதனை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டனர். ஆனால் கத்தோலிக்க இறையியலார் சிலரும் சீர்திருத்த சபைகளின் சிந்தனையாளர்கள் பலரும் இதனை சங்கத்தில் தள்ளிவிடப்பட்ட மரியியல் மிகைப்படுத்துதல்களின் ஒரு வெளிப்பாடாகவே கருதினர். இதற்கு விவிலிய ஆதாரமோ மரபு வழக்கோ இல்லையே என அவர்கள் சுட்டிக் காட்டினர். மேலும் மரியாவை திருச்சபையின் தாய் என்பது அவரை திருச்சபையை விட உயர்வாகவும், அதற்கு புறம்பாகவும் வைப்பதாக இல்லையா? அவரை திருச்சபையின் உள்ளங்கமாக, மாதிரி உறுப்பினராக கருதும் சங்கப் பாதையில் நின்று தடம் மாறுவதாக இல்லையா என்பது அவர்கள் எழுப்பிய கேள்வி

## மரபில் இல்லாத புதுமையா?

திருச்சபையின் தாய் என மரியாவை விவிலியம் எங்கும் குறிப்பிடவில்லை. ஓரிரு புதிய ஏற்பாட்டுப் பகுதிகளில் இத்தகைய பொருள் கொள்ள இடம் இருக்கிறது என ஆய்வாளர்கள் சிலர் கருதுகின்றனர். அவை யோவான் நற்செய்தியில் இயேசுவின் தாய் தோன்றும் இரு பகுதிகளான கானாவூர் திருமண நிகழ்ச்சியும் (யோவான் 21-12), கல்வாரி காட்சியும் (யோவான் 19,25-28) ஆகும். கானாவூர்



# புனித அந்தோணி மரிய பூச்சி

OSM



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

புனித அந்தோணி மரிய பூச்சி 1818 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் நாள் போசோலோ (Poggiolo) என்கின்ற ஒரு சிறிய கிராமத்தில் ஒரு ஏழை விவசாயியின் மகனாகப் பிறந்தார். இவருடைய உண்மையான பெயர் எயூஸ்தாக்கியோ (Eustachio). அவருடைய தந்தை அந்த ஊரில் இருந்த ஆலயத்தில் பணிவிடை செய்து வந்தார். நமது புனிதரும் தந்தையோடு இணைந்து சிறு வயதிலிருந்தே ஆலய பணிகளில் ஆர்வத்தோடு ஈடுபட்டார். மரியாவின் மீது அவருக்கு அதிகமான அன்பு இருந்ததால், தன்னுடைய பங்குத் தந்தையிடம் தன்னை ஒரு மரியாள் பெயர் கொண்ட சபையில் சேர்த்து விடுமாறும், தன்னுடைய பெற்றோர்களிடம் பேசி அனுமதி பெற்றுத் தரும்படியாகவும் கேட்டுக்கொண்டார். நமது புனிதரின் தந்தை முதலில் அனுமதி தர மறுத்தாலும், கடவுளுக்கு எதிராக செயல்படக்கூடாது என்று எண்ணி தனது மகனை 1837 ஆம் ஆண்டு மரியின் ஊழியர் சபைக்கு அனுப்பிவைத்தார். தனது தொடக்ககால பயிற்சியில் இருந்தே தனது திறமைகளை வெளிக்காட்டி ஒரு சிறந்த துறவியாக வளர்ந்தார். தன்னுடைய இறுதி வார்த்தைப்பாட்டில் தனது பெயரை அந்தோணி மரியா என்று மாற்றிக்கொண்டார். 1844 லில் வியாரேசோ (Viareggio) என்ற கடற்கரை கிராமத்திற்கு உதவி பங்குத் தந்தையாக அனுப்பப்பட்டார். அந்த நாளிலிருந்து அவருடைய இறுதி மூச்சு வரை அதே பங்கில் மக்களுக்கு இறை பணிசெய்தார். இவருடைய செயல்களைக் கண்டு இறைநம்பிக்கை இல்லாதவர்கள், திருஅவைக்கு எதிராக இருந்தவர்கள் அனைவரும் வியப்படைந்தனர். 1892 ல் ஒரு நோயாளிக்கு உதவி செய்து முடித்தபின், அவருக்கும் நிமோனியா நோய் தொற்றியது. இந்த நோயினால் நமது புனிதர் அதே ஆண்டு ஜனவரி 12 ஆம் தேதி இறைவனடி சேர்ந்தார். 1952 ல் திருத்தந்தை பனிரெண்டாம் பத்திநாதர் முத்திப்பேறு பட்டம் அளித்தார். புனித திருத்தந்தை இருபத்திமூன்றாம் அருளப்பர் 1962 ல் புனிதர் பட்டம் அளித்தார்.








மிளிர்கிறது. பீடத்துக்கு மேல் உள்ள குவிமாடத்தில் வண்ணக் கண்ணாடி வேலைப்பாடுகளுடன் சன்னல்கள் உள்ளன. அதன் வழியாக வண்ணக் கதிர்கள் ஊடுருவுகின்றன.

ஆலயத்திற்கான புதிய கோபுரம் கட்டப்பட்டு கி.பி. 1999ஆம் ஆண்டு செப்டம்பர் 1ஆம் தேதி அன்று கர்தினால் சைமன் லூர்துசாமி அவர்களால் புனிதப்படுத்தப்பட்டது.

ஆலயத்தின் நூற்றாண்டு விழாவானது கி.பி. 2010ஆம் ஆண்டு சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது. ஆலயம் புதுப்பிக்கப்பட்டு கி.பி. 2010ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி பாண்டி-கடலூர் உயர் மறைமாவட்ட பேராயர் அந்தோணி ஆனந்தராயர் அவர்களால் அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டது.

ஆலய புதுப்பித்தலின் போது தூண்கள் மரப் பேனலிங் வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன, ஆலயம் முழுவதும் வெள்ளை வர்ணம் பூசப்பட்டு கண்களை பரிப்பதாக அமைந்துள்ளது.

ஆலயமானது முழுமையாக புதுப்பிக்கப்பட்டு கி.பி. 2021ஆம் ஆண்டு மார்ச் 25ஆம் நாள் குடந்தை ஆயர் அந்தோணிசாமி அவர்களால் அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டது.

ஆண்டவர் நித்திய பிரசன்னத்தில் என்றும் மகிழ்ந்திருக்கவும், தொடர் ஆராதனைகளில் அமைதியில் ஈடுபடவும் வசதியாக நற்கருணை ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தை சுற்றியும் பசுமை புல்வெளிகளும், வண்ணமலர் பூச்செடிகளும் பராமரிக்கப்படுகிறது. ஆண்டவரைத் தேடி வருவோரின் உள்ளம் அமைதியில் எப்போதும் நிலைத்திருக்க இவை உதவியாய் இருக்கின்றன.

வரதராஜன்பேட்டையில் நடத்தப்படும் வாசகப்பா என்கிற நாடகங்கள் பிரபல்யமானவை. அவற்றில் ஆகினசம்மாள் வாசகப்பா, செபஸ்தியார், அந்தோணியார், ஆரோக்கியநாதர், அருளானந்தர் போன்ற புனிதர்களின் வாழ்க்கை வரலாறானது பாடல்களாக பாடி நடித்துக்காட்டப்படுகின்றன. ஊரில் உள்ள தெருக்கள், தங்களுக்குள் நாடகங்களை பிரித்து நடிக்கின்றனர். இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவை ஒட்டி நடக்கிற இந்நாடகங்களில் நடிக்கவும், பார்க்கவும் இவ்வூரிலிருந்து வெளியூர் சென்று வேலை பார்ப்பவர்களும் தவறாமல் வந்துவிடுகின்றனர்.

இக்கட்டுரையை எழுத தேவையான தகவல்களையும், புகைப்படங்களையும் பெற்றுத்தந்து உதவிய அருட்பணி, ஆரோக்கியராஜ் சிவாஜி ம.ஊ.ச அவர்களுக்கும். பல்வேறு தகவல்களை தரும் தகவல் பெட்டகமாக அமைந்துள்ள அறியப்படாத கிறிஸ்தவம் நூலை எழுதிய நிவேதிதா லூயிஸ் அவர்களுக்கும், வலைத் தளத் தகவல்களை தொகுத்தவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்.


திருப்பயணம் தொடரும்............

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி

## திருத்தூதர் பணிகள்



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21




**வலமிருந்து இடம்**

1) இவற்றைச் சொன்னபின்பு அவர்கள் கண்கள் முன்பாக அவர் மேலே எடுத்துக்கொள்ளப்பட்டார். மேகம் ஒன்று அவரை எடுத்துச் சென்று ............ பார்வையிலிருந்து மறைத்துவிட்டது.

3) அதற்கு ஸ்தேவான் கூறியது: “சகோதரரே தந்தையரே கேளுங்கள். நம் தந்தையாகிய .............. காரான் நகரில் குடியேறுமுன்பு மெசப்பொத்தாமியாவில் வாழ்ந்து வந்தபோது மாட்சி மிகு கடவுள் அவருக்கு தோன்றி

5) அந்தியோக்கிய திருச்சபையில் பர்னபா நீகர் எனப்படும் சிமியோன் சிரோன் ஊரானாகிய லூக்கியு குறநில மன்னன் ஏரோதுவுடன் வளர்ந்த மனாயீன் சவுல்............. இறைவாக்கினராகவும் போதகராகவும் இருந்தனர்.

7) இதோ இப்போதே ஆண்டவரது தண்டனை ........... வரப்போகிறது. குறிப்பிட்ட காலம்வரை நீ பார்வையற்றவனாய் இருப்பாய்: கதிரவனைக் காணமாட்டாய் என்றார்.

9) எனவே, அவர்கள் மீசியா வழியாகச் சென்று துரொவா நகரை.............

11) அப்பொல்லோ கொரிந்தில் .............. பவுல் மலைப்பாங்கான பகுதி வழியாக எபேசு வந்தார். அங்கு அவர் சில சீடர்களைக் கண்டு,

13) ........... அவர், “நம் மூதாதையரின் கடவுள் தம் திருவுளத்தை அறியவும் தம் நேர்மையாளரைக் காணவும் தம் வாய்மொழியைக் கேட்கவும் உம்மை ஏற்படுத்தியுள்ளார்.

**இடமிருந்து வலம்**

2) எனவே அவர்கள் பேதுருவையும் யோவானையும் சங்கத்தைவிட்டு வெளியேறும்படி ஆணையிட்டு பின்பு தங்களுக்குள் இது குறித்துக் கலந்து .............

4) பின்பு யோசேப்பு தம் தந்தை யாக்கோபையும் தம் உறவினர் ............ அங்கு வருமாறு சொல்லி அனுப்பினார். அவர்கள் எழுபத்தைந்து பேர் இருந்தனர்.





கோடுக்க வேண்டும். வீடு இல்லாதவருக்கு நம் வீட்டில் தங்க இடம் கொடுக்க வேண்டும். அப்போது நமது வாழ்வு விடியல்போல் எழும். இருள் நடுவே நம் ஒளி உதிக்கும்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இன்றைய இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல், நமது நம்பிக்கைக்கு அடிப்படை மனித ஞானம் அல்ல, கடவுளின் வல்லமையே என்கிறார். கிறிஸ்துவின் சிலுவையே நமது மகிமை என்பதை உலகிற்குப் பறைசாற்ற நாம் அழைக்கப்படுகின்றோம். இவ்வுலகின் போக்கின்படி நடக்காமல், நம் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடைய வேண்டும். இவ்வுலகப் பொருட்களையும், இன்பங்களையும் ஞானத்துடன் சீர்தூக்கிப் பார்த்து, நற்செய்திக்கு ஒவ்வாதவற்றை அகற்ற அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் நற்செய்தியின் மதிப்பீடுகளை வாழ்வாக்கி பிறரது வாழ்வுக்கு சுவை தருகின்ற உப்பாகவும் பிறரது நல்வாழ்வுக்கு வழிகாட்டும் விளக்காகவும் வாழ தேவையான இறையருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2.அன்பின் இறைவா, நாங்கள் எங்கள் அனுதின வாழ்வில் வெளி சடங்குகளுக்கும், சம்பிரதாயங்களுக்கும் முக்கியத்துவம் தராமல் எங்களது விசுவாசத்தை வாழவாக்கிட எங்களுக்குத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, நாங்கள் எங்களது வலுவின்மையை ஏற்றுக்கொண்டு இறைவனுடைய வலிமையின் துணையை நாடவும் மேலும் ஆவிக்குரிய செயல்களை செயல்படுத்தி இறைவனது பிள்ளைகளாக வாழத் தேவையான இறை ஞானத்தை எங்களுக்குத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, எங்கள் அரசியல், சமூக, சமய மற்றும் ஆன்மீக தலைவர்கள் தங்களது சுயநலத்தை விடுத்து பிறரது வாழ்வின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தங்களையே அர்ப்பணித்து மக்களின் வாழ்வுக்கு சுவை தருகின்ற உப்பாகவும், பாதை காட்டுகின்ற விளக்காகவும் இருக்க தேவையான அருளைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

ஆவிக்குரிய மக்களாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா எங்களது அனுதின வாழ்க்கையில் நாங்கள் எங்களது சுயநலம், பொருளாசை, காமஇச்சைகள் இவற்றிற்கு அடிமைகளாக இல்லாமல், தூய்மை நிறைந்த மக்களாக வாழ்ந்து, எல்லாரையும் கடவுளிடம் கொண்டு சேர்க்கின்ற கருவிகளாக வாழ்ந்திடத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 5-ம் ஞாயிறு (05.02.2023)**

**எசா 58:7-10 1கொரி 2:1-5 மத் 5:13-18**

**முன்னுரை**

மனித வாழ்வு என்பது இருளுக்கும் ஒளிக்கும் இடையிலான போராட்டமே. இருளைச் சாத்தானுக்கும், ஒளியைக் கிறிஸ்துவுக்கும் நாம் ஒப்பிடுகிறோம். நம்முடைய அன்றாட வாழ்வில் நடக்கும் போராட்டத்தின் இறுதியில் ஒளியே வெற்றி கொள்கிறது. கிறிஸ்துவே வெற்றி பெறுகிறார். ஒளி என்றாலே நமது எண்ணத்திற்கு வருவது பகலிலே ஒளி கொடுக்கும் சூரியன், இரவில் ஒளி கொடுக்கும் சந்திரன் மற்றும் விண்மீன்கள். இவை நம்முடைய புற வாழ்வுக்கு ஒளியாக இருக்கின்றன.

இருள் வந்தால்தான் ஒளியின் அருமை தெரியும் என்று சொல்வார்கள். பாவிகளாகிய நம்முடைய அக வாழ்வுக்கு கிறிஸ்து ஒளியாகத் திகழ்கிறார். இன்றைய இறைவார்த்தை கிறிஸ்துவை ஒளியாக வர்ணிக்கின்றன. கிறிஸ்துவை ஒளியாக நாம் ஏற்றுக் கொண்டால் இருண்ட நம் உள்ளத்தில் ஒளி உண்டாகும். நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள் என்கிறார் இயேசு.

இருளைப் பழிப்பதைவிட ஒளியேற்றுவது மேல். சூரியனை நோக்கி நடந்தால் நிழல் பின்னால் போய்விடும். இவ்வுலகின் தீமைகளைச் சபிப்பதைவிட்டுவிட்டு எதிர்மறை எண்ணங்களை அகற்றிவிட்டு, நன்மையால் தீமையை வெல்வோம். அன்பு செய்யும் போது ஒளியில் வாழ்கிறோம். பகைமையில் வாழும்போது இருளில் சிக்கித் தவிக்கின்றோம் என்கிறார் யோவான் தனது முதல் திருமுகத்தில். எனவே நமது அன்றாட வாழ்வில் ஒளியின் கனியாகிய உண்மையைப் பேசி, நன்மையைச் செய்து, நீதியை கடைப்பிடிக்க தேவையான இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

நாம் ஒளியின் மக்களாக வாழ என்ன செய்ய வேண்டுமென்று இன்றைய முதல் வாசகம் கூறுகிறது. நமது உணவைப் பசியோடு இருப்பவர்களுடன் பகிர வேண்டும். ஆடையற்றவர்களுக்கு ஆடை





6) செசரியா நகரில் கொர்னேலியு என்னும் பெயருடைய ஒருவர் ............. அவர் இத்தாலியா எனப்பட்ட படைப்பிரிவில் நூற்றுவர் தலைவர்.

8) கடந்த காலங்களில் அவர் அனைத்து மக்களினங்களையும் அவரவர் ......... நடக்கும்படி விட்டிருந்தார்

10) பவுல் இறைவார்த்தையைப் பெரோயாவிலும் அறிவித்ததைத் தெசலோனிக்க யூதர் அறிந்து, அங்கேயும் வந்து மக்கள் கூட்டத்தினரைக் குழப்பிக் கலகம் .................

12) யூத்திகு என்னும் இளைஞர் ஒருவர் பலகணியில் உட்கார்ந்திருந்தார். பவுல் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தபோது அவர் ............ தூங்கிக் கொண்டிருந்தார் தூக்கத்தில் மூன்றாம் மாடியிலிருந்து கீழே விழுந்தார் அவரை அவர்கள் பிணமாகத்தான் தூக்கி எடுத்தார்கள்.

**மேலிருந்து கீழ்**

1) அவர்கள் ............தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத்தொடங்கினார்கள்.

2) ஒருநாள் இறைவேண்டல் செய்யும் நேரமாகிய பிற்பகல் மூன்று மணிக்குப் ............ யோவானும் கோவிலுக்குச் சென்றனர்.

7) “நீர் ஏன் விருத்தசேதனம் செய்துகொள்ளாதோரிடம் சென்று அவர்களுடன் உணவு
............ என்று குறை கூறினர்.

8) யூதேயாவிலிருந்து வந்த சிலர், □நீங்கள் மோசேயின் முறைமைப்படி விருத்தசேதனம் செய்து கொள்ளாவிட்டால் மீட்படைய முடியாது” என்று சகோதரர் சகோதரிகளுக்குக் கற்பித்து .............

12) மறுநாள் பவுல் எங்களைக் கூட்டிக் கொண்டு யாக்கோபிடம் சென்றார். அங்கு
............. மூப்பரும் வந்திருந்தனர்.

**கீழிருந்து மேல்**

3) அப்பொழுது பேதுரு, “அனனியா, நீ நிலத்தை விற்ற தொகையின் ஒரு பகுதியை உனக்கென்று வைத்துக்கொண்டு தூய........... பொய் சொல்லும்படி சாத்தான் உன் உள்ளத்தை ஆட்கொண்டதேன்?

4) அதற்கு அவர் “யாராவது விளக்கிக்காட்டாவிட்டால் எவ்வாறு என்னால் தெரிந்துகொள்ள முடியும்?” என்று கூறித்தேரில் ஏறித் தன்னோடு ............ பிலிப்பை அழைத்தார்.

5) அதற்கு அவர் “ஆண்டவரே நீர் யார்?” எனக்கேட்டார். ............ “நீ துன்புறுத்தும் இயேசு நானே.

11) அவ்விடத்தை விட்டுவிட்டுக் கடவுளை வழிபடும் தீத்து யுஸ்து என்னும் பெயருடைய ஒருவரின் வீட்டுக்குப் போனார். அவரது வீடு தொழுகைக் கூடத்தை அடுத்து ............

13) ............ இப்படிச் சொன்னபோது பரிசேயருக்கும் சதுசேயருக்குமிடையே வாக்குவாதம் எழுந்தது. எனவே, அங்குத் திரண்டிருந்தோர் இரண்டாகப் பிரிந்தனர்.

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-01-2023**

**சென்ற மாதத்தின் விடைகள் யோவான்**

**வ. இ.** **2.** 3:21;**3.**6:5**; 5**:9;**6; 8**:19:27; **9.** 18:2;**13.**5:3

**இ. வ.** **1.** 1:7; **4.** 7:26; **6.** 11:8; **7.** 15:26; **10.**19:8; **11.**1:5; **12.** 3:8

**கீ. மே.** **1.** 2:11; **2.**4:9; **5.** 10:18; **6.** 12:11;**9.** 21:9**;10.** 20:4; **13.** 6:9

**மே. கீ.** **3.** 5:14; **5.** 8:16; **7.**14:18; **8.**17:2; **12.**4:25;

# பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு ⑧



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

**தொடர் உரையாடல்**

இதுவரைக்கும் கண்டிருந்த அன்னையவர் காட்சியிங்கே
இருவருக்கு மட்டுமே தெரிந்ததுதான் மாட்சியங்கே
துருதுருவாம் குறும்புக்கார சிறுவனான பிரான்சிசோ
வெறும் பேரொளிதான் உணர்ந்திருந்தான் சாட்சியங்கே
லூசியா ஜெசிந்தாவின் உதடுகள் அசைவதையே
ஆசையாய் பார்த்திருந்த சிறுவன்தானும் ஏங்கிப்போக
அன்னை உருவம் காண்பேன் இல்லை
அன்னை உதிர்த்ததையும் கேட்டேன் இல்லை
லூசியாவிடம் பிரான்சிசு எடுத்துச் சொன்னான்
லூசியாவும் அன்னையிடம் பரிந்து சொன்னாள்
உருக்கமாக செபமாலை செபிக்கும் படியாக
கருத்தமாக சிறுவனுக்கு பகிர்ந்து நின்றார்.
ஏழுமணிதான் உருட்டியிருப்பான் செபமாலைக் கைக்கொண்டு
எட்டாவது மணிக்கே மாதாவின் காட்சிகண்டு
அடிபணிந்து வணங்கினான் ஆரவாரமே பருகினான்
ஆயினுமே மாமரியின் வார்த்தையேதும் கேட்கிலான்
நிகழுவன தொடர்ந்திருக்க ஞாபகமோ உடனிருக்க
சமீபத்தில் மரணித்த அக்காவின் புதல்விகளுள்
கஸ்மேரிஸ் விண்ணகத்தில் இருக்கிறாளா எனத்தொடுக்க
கன்னிமரி ஆமென்றே முகம் மலர்ந்தார்.
அடுத்தவினா அப்படியே அமலியா எனவிடுக்க
விடுத்தநொடி அன்னைமரி திருமுகமே வாடினார்
உத்தரிக்கும் நிலைமையிலே அமலியா உழலுகிறாள்
உயிர்த்தெழும் நாளில்வந்து சேருவாளே என்றுரைத்தார்.
மூவருமே என்பொருட்டு துன்பங்கள் பொறுக்கவேணும்
மூவருக்கும் எத்தீங்கும் அண்டாமல் காப்பேன்நானும்
ஒவ்வொரு திங்களுமே இத்திரு நிழல்தன்னில்
அத்திரு நாளில்வந்து காட்சிதர வாக்களித்தார்
வந்ததுபோல் வானகமே கிழக்குமுகம் ஏறிச்சென்றார்
பாய்ந்துவந்த பேரொளியும் தொடர்ந்திடவே வீசிச் சென்றார்.
மூவரது முகங்கள்கூட பேரொளியால் சொரிந்தனவே
காண்போரது கண்களிலும் மேலெழும்பித் தெரிந்தனவே.





இயேசு தனது பணிவாழ்வு ஏழைகளுக்கும், எளியோருக்கும் மட்டுமே உரியது என்பதற்கு முன் உதாரணமாக ஏழையினும் ஏழையாக ஒரு மாட்டுத் தொழுவத்தினில் பிறந்தார். ஏழைகளின் துன்பத்தை உணர்ந்தார், ஏழைகளின் வாயிலாகவே பேசினார். அவர் ஏழைகளின் இறைவன் என்பதை எல்லாச் சூழல்களிலும் மெய்ப்பித்துக் காட்டினார். நாமும் அக்கிறிஸ்துவைப்போல ஏழைகளை அன்பு செய்வோம். துன்புறும் ஏழைகளின் சார்பாக நிற்போம். இறைவன் விரும்பிய இறையரசை இம்மண்ணுலகில் உருவாக்கிட தேவையான இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

செப்பனியா, யோசியா காலத்தில் இறைவாக்கு உரைத்தவர். சமய வாழ்வின் மறுமலர்ச்சிக்காக உழைத்தவர். சீர்கெட்ட மக்களை இறைவன் தண்டிப்பார் என்று எச்சரித்தார். அதே வேளையில் இறைவனுக்கு அஞ்சி நல்வழி நடப்போர் அவரது அன்பையும் அருளையும் பெறுவர் என்று ஆறுதலும் கூறியவர். இயேசுவின் மலைப்பொழிவிற்கு பின்னணியாக அமைந்துள்ளது இன்றைய முதல் வாசகம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

ஒவ்வொரு கிறிஸ்தவனும் இயேசுவின் அர்ப்பணத்தால் பாவத்தினின்று பிரிக்கப்பட்டு, இறைவனுக்கு ஏற்ற காணிக்கையாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளான். நாம் தூயோராகவும், மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார். அவ்வழைப்புக்கு ஏற்ற வாழ்க்கை வாழ்ந்திட இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்து பிறப்புக் காலத்தில் பெற்ற இறையனுபவத்தை பிறரோடு பகிர்ந்து இவ்வுலகிற்கு ஒளியாக வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, கடவுள் பல வகையில் நம்மைச் சந்திக்கின்றார். அக்கடவுளை எங்களது சாதாரண நிகழ்வுகளிலும் எங்களது அனுதின வாழ்விலும் இனம் கண்டு எங்களது ஆன்மீக வாழ்வில் நாங்கள் உயர்வு பெற எங்களுக்குத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா, திருமுழுக்கால் அருட்பொழிவு செய்யப்பட்ட நாங்கள் ஒவ்வொருவரும் உமது ஆவியின் வல்லமையால் தூண்டப்பட்டு

**மன்றாட்டுக்கள்**

1.அன்பின் இறைவா, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் ஒப்பற்ற செல்வமாகிய கிறிஸ்துவை தங்களது ஆதாயமாக்கிக் கொண்டு அழைத்த கடவுளுக்கு உண்மையுடன் பணியாற்ற தேவையான அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, எங்களது மனமாற்றத்திற்குத் தடையாக இருக்கின்ற பேராசையை விடுத்து, இறை அச்சமும், இறை நம்பிக்கையும் கொண்ட மக்களாக வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, பலவேறு தீய பழக்கங்களுக்கும் தீய வாழ்வுக்கும் அடிமையாக இருக்கின்ற எம் மக்கள் எல்லாத் தீமைகளிலிருந்தும் விடுபட்டு உமது ஒளியைக் கண்டு அவ்வொளியின் மக்களாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, சாதியால், நிறத்தால், மொழியால், வாழ்வு நிலைகளில் பிரிந்திருக்கின்ற உம் மக்கள் அனைவரும் திருமுழுக்கு என்கின்ற திருவருட்சாதனத்தின் வழியாக ஒரே குடும்பமாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்ற உண்மையை உணர்ந்து ஒரே மனமும், ஒரே கருத்தும் கொண்ட மக்களாக வாழ அருள்புரிய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலத்தின் 4 –ஆம் ஞாயிறு (29.01.2023)**

**செப் 2:3;3:12-13 1கொரி 1:0-31 மத் 5:1-12**

**முன்னுரை**

“இந்தியாவில் ஒரே ஒரு கிறிஸ்தவர் மட்டும் இருந்தார். அவரும் திருமுழுக்குப் பெறாதவர்” என்று ஓர் ஆங்கில அறிஞர் கூறியுள்ளார். அந்த ஒரே கிறிஸ்தவர்தான் மகாத்மா காந்தி. அவர் கூறினார்”இந்துக்களின் புனித புத்தகமாகிய பகவத்கீதையை நான் இழக்க நேரிட்டாலும், கிறிஸ்துவின் மலைப் பொழிவின் ஒரு பிரதி இருந்தால் எனக்குப் போதும்”. உண்மையாக காந்தி கிறிஸ்துவின் மலைப் பொழிவின் வழியில் சென்று கத்தியின்றி, இரத்தமின்றி சாத்வீக முறையில் இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுத்தந்தார் என்றால் மிகையாகாது. கிறிஸ்துவினுடைய போதனையின் சுருக்கம் மலைப் பொழிவு என்றால் மலைப் பொழிவின் சுருக்கம் எட்டுப் பேறுகள். அந்த எட்டுப் பேறுகளின் சுருக்கம் முதல் பேறு “ஏழைகளின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்”. இன்றைய இறைவார்த்தை வழிபாடு எளியோரையும், ஏழைகளையம் மையப்படுத்துகிறது.





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



**பொதுக்காலம் இரண்டாம் ஞாயிறு (15.01.2023)**

**எசா 49:3,5-6 1 கொரி 1:1-3 யோ 1:29-34**

**முன்னுரை**

இறையேசுவில் அன்பார்ந்த இறைமக்களே, பொதுக்காலத்தின் துவக்க ஞாயிற்றுக் கிழமையில் உள்ள நாம், கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு அழைப்புவிடுக்கின்றது. கிறிஸ்துவின் பிறப்பால் நாம் பெற்ற இறையனுபத்தையும், அவரது மகிழ்ச்சியையும் நாம் பிறரோடு பகிர்ந்து வாழ இறைவன் நமக்கு அழைப்புவிடுக்கின்றார். இறைவன் யாரை விரும்புகிறாரோ அவர்களை தமது மீட்பின் கருவிகளாக செயல்பட அழைப்புவிடுக்கின்றார்.

இறைவனுக்கு சான்று பகர்வது என்பது வாழ்வின் ஏதாவது ஒரு கட்டத்தில் இயேசுவுக்காகக் கொல்லப்பட்டு மறைசாட்சியாக இறப்பதில்தான் இருக்கின்றது என்று நாம் எண்ணலாம். ஆனால் இயேசுவுக்கு சான்று பகர்வது என்பது அவருக்காக இறப்பதில் மட்டுமல்ல, மாறாக அவருக்காக வாழ்வதிலும்தான் இருக்கிறது என்பதை அறிந்து வாழ இறைவன் நமக்கு அழைப்பு விடுக்கின்றார். நாம் வாழ்கின்ற காலத்திலேயே பிறர் நலனுக்காக, வாழ்வுக்காக , மகிழ்ச்சிக்காக, விடுதலைக்காக, உறவுக்காக நம்மையே கரைத்துக் கொள்ளும் ஒவ்வொரு நிகழ்விலுமே நாம் இயேசுவுக்கு சாட்சி பகர்கின்றோம். இத்தகைய ஒரு வாழ்வினைத்தான் திருமுழுக்கு யோவான் வாழ்ந்தார். அத்திருமுழுக்கு யோவானை போல நாமும் இயேசுவுக்கு சாட்சிய வாழ்க்கை வாழ இறையருள் வேண்டி இத்திருப்பலியில் சிறப்பாக மன்றாடுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இறைவன் தன் அரசுக்கு அனைவரையும் அழைக்கின்றார். உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார். தேர்ந்தெடுத்த இறைவன் நம் ஒவ்வொருவரையும்

பராமரித்து வருகின்றார். அவ்விறைவனின் மீட்புத்திட்டத்தில் நாமும் இயேசுவோடு இணைந்து செயல்பட்டு உலகிற்கு ஒளியாக திகழ்ந்திட வரம் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

அறிஞர்களும் செல்வந்தர்களும் மலிந்த நகரம் கொரிந்து, மனந்திரும்பிய மக்களுள் இத்தகையோர் இல்லாமல் இல்லை. எனினும் பெரும்பாலான கிறிஸ்தவர்கள், உலகத்தாரால் ஒதுக்கப்பட்டவர்கள். ஆனால் இவர்களைத் தான் இறைவன் தேர்ந்துகொண்டார் என்ற உண்மையை உணர்த்துகின்றது இன்றைய இரண்டாவது வாசகம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் மலைப்பொழிவினை வாழ்வாக்கி இறைவனது பேற்றுக்கு உரிய மக்களாக வாழ்ந்திட அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் எங்களது அனுதின கிறிஸ்தவ வாழ்வில் ஏழ்மையிலும், எளிமையிலும் உம்மை காணவும், எங்களது சுயநலத்தையும் ஆணவத்தையும் தவிர்த்து எளிய மக்களாக எங்களது வாழ்வை தொடர்ந்திட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா, இன்றைய நவீன உலகிலே, உமது திரு அவை எப்போதும் ஏழைகளின் சார்பாகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வு உயர உழைத்திடவும் தேவையான அருள் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா, அடிப்படை தேவைகளை எதிர்நோக்கியிருக்கின்ற உம் மக்கள் மீது பரிவும், இரக்கமும் கொண்டு அவர்களது தேவைகளை பூர்த்தி செய்து அவர்கள் மகிழ்வோடும், நம்பிக்கையோடும் வாழ துணை புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 3-ஆம் ஞாயிறு (22.01.2023)**

**எசா 8:23;9:3 1கொரி 1 :12-13,17 மத் 4:12-23**

**முன்னுரை**

இருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டனர். இறைவாக்கினர் எசாயா, மெசியா வருகையால் மக்கள் காணும் மீட்பை அறிவித்தார். இன்றைய உலகில், இருளுக்கும் ஒளிக்கும் நடக்கும் தொடர் போராட்டத்தில் அதாவது நீதிக்கும், அநீதிக்கும் உண்மைக்கும், பொய்க்கும் ஏற்படும் போராட்டத்தில் ஒளியை வெல்லும் என்பதை திட்டவட்டமாக இயேசு கூறுகிறார்.





பேரொளியைக் கண்டிட நாம் மனம் மாற்றம் பெற வேண்டும். மனமாற்றம் என்பது ஒரு தலை கீழ் மாற்றமாகும். உலகை மையமாக வைத்துச் செயல்படாமல் கடவுளை மையமாக வைத்துச் செயல்படும் முறையாகும். கிறிஸ்து தம்மைப் பின்பற்றும்படி அழைக்கப்பட்ட அவரது முதல் நான்கு சீடர்களுடைய வாழ்க்கையிலே அத்தகைய தலைகீழ் மாற்றம் ஏற்படுவதை இன்றைய நற்செய்தி நமக்கு உரைக்கின்றது. கடலையும், படகையும், வலைகளையும் தங்களது வாழ்வாதாரமாக கொண்டு வாழ்ந்த அச்சீடர்கள் அவற்றையெல்லாம் விட்டுவிட்டுக் கிறிஸ்துவைப் பின்பற்றினர்.

மனமாற்றத்திற்கு மாபெரும் தடை பொருள் ஆசை. பொருள் ஆசையே எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர். எவ்வித சமரசத்திற்கும் இடமின்றி கிறிஸ்து தெள்ளத் தெளிவாக கூறியுள்ளார். நீங்கள் கடவுளுக்கும், செல்வத்திற்கும் ஊழியம் செய்ய முடியாது. எனவே நமது ஒப்பற்ற ஒரே செல்வமாக கிறிஸ்துவை நம்பி அவரை முழுமையாக பின்பற்றுவோம். கடவுளை நமது வாழ்வின் மையமாக வைத்துச் செயல்படுவோம். அதற்கான இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

பாபிலோனியாவில் விடுதலை வேண்டித் தவித்த இஸ்ரயேலருக்கு நம்பிக்கையூட்டும் வகையில் எசாயாவின் இறைவாக்கு அமைந்துள்ளது. எங்கு நோக்கினும் காரிருள், கடுந்துயர், மன வேதனைகளே யூதாவைச் சூழந்திட்ட வேளையில் இருளில் ஒளிபோல் அமைகிறது ஆண்டவரின் நாள் என்கிறார் எசாயா இறைவாக்கினர். அத்தகைய பேரொளி இருள் படர்ந்த நமது வாழ்விலும் வீச இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

ஒரே மனமும் ஒரே கருத்தும் கொண்டிருப்பதே உண்மையான ஒன்றிப்பாகும் என்கிறார் புனித பவுல் அடிகளார். கொரிந்திய திரு அவையில் அன்று தோன்றிய பிளவு மனப்பான்மை இன்று விரிந்து பல்வேறு பிரிவினை சபைகளாகப் பரிணமித்துள்ளது. கிறிஸ்துவோடு நட்புறவு கொண்டவர்கள் கிறிஸ்தவர்கள். கிறிஸ்து ஒருவரே. அவரது உடலாகிய திருஅவையும் ஒன்றுதான். எனவே பிளவுபட்ட கிறிஸ்துவைத் தேடுவது கிறிஸ்துவைக் கூறுபோடுவதற்குச் சமம். திருஅவையை உடைப்பதற்குச் சமம். எனவே, ஒரே ஆயனின் கீழ் வாழும் ஒரே மந்தையாக வாழ இறையருள் வேண்டுவோம்.